வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P.1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 02.04.2025 புதன்கிழமை இதழ் : 94 பக்கங்கள் : 12

# 13ஆவது திருத்தம் குறித்து இந்தியாவுடன் பேசக்கூடாது


## காணி, பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு பகிரந்தளித்தால் தேவையற்ற முரண்பாடுகள் வரும்!!

### மோடியின் விஜயம் குறித்து பெரமுன எச்சரிக்கை

கொழும்பு, ஏப்ரல் 02

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் குறித்து இந்தியாவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது அவசிய மற்றது. காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு பகிரந்தளித்தால் தேவையில்லாத முரண்பாடுகள் தோற்றம் பெறும். இந்தியாவுடன் அரசாங்கம் செய்து கொள்ளவுள்ள ஒப்பந்தங்கள் குறித்து தீவிர அவதானம் செலுத்தியுள்ளோம் என்று பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

11



## மாகாணசபை தேர்தல் இந்த வருடம் இல்லை!

### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

கொழும்பு, ஏப். 02

மாகாண சபைத் தேர்தல் இந்த வருடம் இடம் பெறாது என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தல் இடம்பெற்றால் ஆறு மாதத்துக்குள் இலங்கை மூன்று தேர்தல்களை சந்தித்திருக்கும் என தெரிவித்த அவர், இதன் காரணமாக மற்றுமொரு தேர்தல் சாத்தியமில்லை என குறிப்பிட்டார்.

அரசாங்கம் தொடர்ந்து தேர்தல்களை

11

## எரிபொருளின் விலையை மேலும் குறைக்க முடியாது

கொழும்பு, ஏப். 02

நாட்டின் பொருளாதாரத்துக்கு சர்வதேச நாணய நிதியம் விதித்துள்ள நிபந்தனைகள் இன்னும் நடைமுறையில் உள்ளதால் எரிபொருள் விலையை மேலும் குறைக்க முடியாது என விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் கிரிஷாந்த அபேசேன தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

11

## திட்டங்களின் நடைமுறையாக்கத்தை நேரில் சென்று பார்வையிடவேண்டும்!

### திணைக்கள தலைவர்களுக்கு ஆளுநர் பணிப்பு

யாழ்ப்பாணம், ஏப் 02

2025ஆம் ஆண்டுக்கான திட்டங்களின் நடைமுறையாக்கத்தை நேரடியாகச் சென்று திணைக்களத் தலைவர்கள் பார்வையிடவேண்டும் என்பதுடன் ஆகக்குறைந்தது இரண்டு வாரங்களுக்கு ஒரு முறையாவது திட்டமுன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தை செயலாளர்கள் நடத்த வேண்டும் எனவும் வடக்கு மாகாண

11



## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தை அரசியலாக்க ஆளும் தரப்பினர் முயற்சி!

### நாமல் ராஜபக்ஷ குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப் 02

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தை அரசியலாக்குவதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முற்படுகின்றது என்று பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ குற்றஞ்சாட்டியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துக்கு பொறுப்பு கூறவேண்டிய தரப்பின் விவரம் ஏப்ரல் 21 ஆம் திகதிக்கு முன் வெளியிடப்படும் என ஜனாதிபதி அறிவித்துள்ள நிலையிலேயே நாமல் இவ்வாறு குறிப்பிட்டார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்-

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில்

11

உள்ளூராட்சிச்சபைத் தேர்தல்

## சில உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல் செயல்பாட்டுக்குத் தடை

கொழும்பு, ஏப். 02

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக தாக்கல் செய்யப்பட்டு நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுக்கள் தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குடன் தொடர்புடைய உள்ளூராட்சி மன்றங்களில் தேர்தலுக்கான சகல நடவடிக்கைகளையும் இன்று வரை இடைநிறுத்தி இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற

11

## யாழ்.பல்கலை மாணவன் மீது பகிடிவதை: மனித உரிமைகள் ஆணைக்குழு கவனம்!

யாழ்ப்பாணம், ஏப். 02

யாழ்ப்பாண பல்கலைக்கழக விஞ்ஞானப் பீட புதுமுக மாணவன் மீதான பகிடிவதை தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய காரியாலயம் கவனம் செலுத்தியுள்ளது என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

1998 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க கல்வி நிறுவனங்களில் பகிடிவதையையும் வேறுவகையான வன்செயல்களையும் தடை செய்தல் சட்டம்,

11

## தேசிய மக்கள் சக்தி அடித்தளம் பலவீனம்!

### பேராசியர் நிர்மல் ரஞ்சித் தேவசிறி

கொழும்பு, ஏப். 02

தேசிய மக்கள் சக்தி தலைவர்கள் இன்று செயல்படும் விதத்தில் அவர்களின் பிரபலமான அடித்தளம் கணிசமாக பலவீனமடைவதைக் காண்பதாக பேராசியர் நிர்மல் ரஞ்சித் தேவசிறி தெரிவித்துள்ளார்.

11

## கொழும்பில் விசேட பாதுகாப்பு நடவடிக்கை!

கொழும்பு, ஏப் 02

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு கொழும்பு நகரத்தில் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதன்படி, குறித்த பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக 6,000 பொலிஸ் அதிகாரிகள்

11

## ஜூலை மாதம் முதல் பஸ் கட்டணம் உயரும்

கொழும்பு, ஏப். 02


ஜூலை மாதத்தில் பேருந்து கட்டணம் கணிசமாக அதிகரிக்கும் என்று இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.


நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் கோயில் வருடாந்த பெருந்திருவிழா நேற்று செவ்வாய்க் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானபோது... (படங்கள் : பூ.பத்மலிங்கம்)

# தேர்தல் மேடைகளில் கட்சி சார்பாக செயல்படுகின்றார் ஜனாதிபதி அநுர

## சஞ்சீவ எதிரிமன்ன குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப் 02

ஜனாதிபதி அநுரகுமார திஸ ாநாயக்க தேர்தல் மேடைகளில் கட்சி சார்பாக செயற்பட்டு வருவதாக முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர் சஞ்சீவ எதிரி மன்ன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பின் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-


தேசிய மக்கள் சக்தி அர சாங்கம் புதிய அரசியல் கலா சாரத்தை உருவாக்குவதாக குறிப்பிட்டது.

ஆனால் அத்தகைய விடயம் இடம்பெற்றதாக தெரிய வில்லை. தேர்தல் மேடைகளில் ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க தேசிய மக்கள் சக்தியின் தலைவராக தேர்தல் பிரசார நடவக்கைகளில் ஈடுபடுகின் றார். அதனை ஏற்றுக்கொள்ள முடியாது. நாட்டின் ஜனாதிபதி அவ்வாறு செயற்படுவது பொருத்தமற்ற விடயமா கும்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த தருணத்தில் பொதுத்தேர்தல் மேடைகளில் அவர் இவ்வாறு செயற்படவில்லை. அதே போன்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் கூட அவ்வாறு செயற்படவில்லை. அவர்கள் ஊடாகவேனும் தற்போதைய ஜனாதிபதி பாடத் தைக் கற்றுக்கொள்ளவில்லை.

அதேபோன்று மியன்மார் மக்கள் இயற்கை அனர்த்தத்தி னால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் அயல் நாடு மற்றும் கலாசார ரீதியான நட்பு நாடு என்ற வகையில் அந்த நாட்டுக்கு இராணுவ உதவியை அரசாங்கம் வழங்க வேண்டி யது அவசியமாகும். ஆனால் அத்தகைய விடயம் இடம் பெற்றதாக தெரியவில்லை. அயல்நாடுகளுக்கிடையில் நட் புறவை பேணும் விடயத்தில் அரசாங்கத்தின் இயலாமையே வெளிப்படுகின்றது - என்றார். (அ)

# நல்லூர் மனோன்மணி அம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகம்



யாழ்ப்பாணம், ஏப். 02

நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வடகிழக்கு வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ மனோன்மணி அம் மன் ஆலய புனராவர்த் தன அஷ்ட பந்தன மஹா கும்பாபிஷேகம் எதிர் வரும் 07ஆம் திகதி திங் கட்கிழமை நடைபெற வுள்ளது.

முன்னதாக நாளை வியாழக்கிழமை காலை முதல் பூர்வாங்க கிரியை கள் இடம்பெற்று நாளைமறுதினம் வெள்ளிக் கிழமை நண்பகல் 12 மணி முதல் சனிக்கிழமை மாலை 4 மணிவரை எண்ணெய் காப்புச் சாத்தல் இடம்பெற்று, மறுநாள் 7ஆம் திகதி திங்கட் கிழமை பூசநட்சத்திரமும், சித்த யோகமும் கூடிய காலை 9.20 மணிமுதல் 10.20 மணிவரை யுள்ள இடபலக்ன சுபமுகூர்த்த வேளையில் மனோன்மணி அம்பாளுக்கும் விநாயகர் முதலான பரிவாரமூர்த்திகளுக் கும் நவசக்தி இராஜகோபுரத் திற்கும் மஹா கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது. (அ)

# சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட இருவர் கைது!

யாழ்ப்பாணம், ஏப் 02

வடமராட்சி கிழக்கு கட் டைக்காடு கடற் பகுதியில் நேற்று அதிகாலை சட்ட விரோத மீன்பிடியில் ஈடுபட்ட இருவர் இரண்டு படகுகளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடமராட்சி கிழக்கு கடற் பகுதிகளில் சட்டவிரோத நடவடிக்கைகளை கட்டுப்படுத் தும் நோக்கில், வெற்றிலைக் கேணி கடற்படையினர் தொடர் சுற்றிவளைப்புகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நடவடிக்கையின் ஒரு பகுதியாக நேற்று அதிகாலை, கடற்படையினர் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பில், ஒளிப் பாய்ச்சி மீன்பிடித்த இருவர் இரண்டு படகுகளுடன் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கட்டைக்காடு பகுதியை சேர்ந்த வர்கள் என்பதுடன் அவர்கள், விசாரணைகளின் பின்னர் மேலதிக சட்ட நடவடிக்கைக ளுக்காக, யாழ்ப்பாணம் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளி டம் ஒப்படைக்கப்பட்டனர். (அ)

# நாகர்கோவில் - எழுதுமட்டுவாழ் வீதியின் பால புனரமைப்பு பணி மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 02

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் சந்தியில் இருந்து எழுதுமட்டுவாழ் பிரதேசத் திற்கு வீதியின் பால புனர மைப்புப் பணிகள் மழை வெள் ளம் காரணமாக தடைப்பட்டி ருந்த நிலையில் நேற்று மீண் டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

1959 ஆம் ஆண்டு, நீர்ப் போக்கு பாலமாக அமைக்கப் பட்டிருந்த இந்தப் பாலம் மாரி காலத்தில் வெள்ளத்தில் மூழ்கு வதனால் கடந்த சில மாதங்க ளாக, பயன்படுத்த முடியாத நிலை காணப்பட்டது.

கடந்த மூன்று ஆண்டுகளாக வன ஜீவராசிகள் திணைக்கள கட்டுப்பாட்டில் உள்ள பகுதி யில் பாலம் அமைப்பதற்கு தடைகள் இருந்தபோதிலும், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் கு.பிரபாகரமூர்த்தி மற்றும் நாகர்கோவில் மக்க ளின் முயற்சிகள் மூலம், வன ஜீவராசிகள் திணைக்களம், பாலம் அமைக்க அனுமதி வழங்கியது.

நாகர்கோவில் - எழுது மட்டுவாழ் பிரதான வீதி முடங்கி இருந்ததால் பொது மக்கள் சுமார் 40 கிலோ மீற்றர் தூரம், மாற்றுப்பாதை வழியாக பயணம் செய்தனர்.

இதனால், புதிய பாலம் அமைக்கப்பட்டு வருகின்றது.

புனரமைப்புப் பணிகள் இடம்பெற்ற வேளை, கடந்த நாட்களில் பெய்த கடும் மழை யால் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டன.

இந்த நிலையில், பாலத்தை புனரமைக்கும் பணிகள் நேற்று மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள் ளன. (அ)

# மியன்மார், தாய்லாந்துக்கு அரசாங்கம் உதவவேண்டும்

## ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை

கொழும்பு, ஏப். 02

மியன்மார் மற்றும் தாய்லாந் தில் ஏற்பட்ட இயற்கை அனர்த் தத்தினால் பாதிக்கப்பட்டவர் களுக்கு உதவ அரசாங்கம் முன் வரவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்த நாயக்க வேண்டுகோள் விடுத் துள்ளார்

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பின்போதே அவர் இந்த வேண்டு கோளை விடுத்துள்ளார்

அவர் மேலும் தெரிவிக்கை யில் -

அண்மையில் மியன்மார் மற்றும் தாய்லாந்தில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தின் காரணமாக ஏராளமானோர் உயிரிழந்துள்ளதோடு சொத்து களுக்கும் சேதம் ஏற்பட்டுள் ளது. அந்த விடயத்திற்க்கு நாம் நாடு என்ற வகையில் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரி வித்துக்கொள்ள விரும்புகின் றோம். மியன்மார் எமது அயல் நாடு மற்றும் பௌத்த நாடு என்ற வகையில் ஏற்பட்ட சேதம் மற்றும் உயிரிழந்தவர்க ளின் எண்ணிக்கை இன்னும் சரியாக குறிப்பிடப்படாவிட் டாலும் பாரிய இழப்பு ஏற்பட் டிருப்பதாகவும் ஏராளமானோர் உயிரிழந்திருப்பதும் எங்களால் கணக்கூடியதாக உள்ளது. எவ் வாறாயினும் முதலாவது விட யம் எமது அயல் நாடான அந்த மக்களுக்கு உதவி செய்ய முடியுமானால் அதை நாம் செய்ய வேண்டும். மேலும் இது தொடர்பில் பல அறிவித்தல் கள் அரசாங்கம் வெளியிட்டி ருந்தது. அதேபோன்று பல அயல் நாடுகள் இவ்வாறான நெருக்கடியான சூழ்நிலையில் பாரிய அளவில் எமக்கு உதவி செய்திருக்கிறது. மியன்மார் மற்றும் தாய்லாந்தில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தின் கார ணமாக பலர் நெருக்கடிக்கு உள் ளாகியுள்ளனர். அதனால் அவர் களுக்கு உதவி செய்யும் வகை யில் நாடு என்ற வகையில் நாங் கள் முன்வரவேண்டும் என்றார்.

# நிவாரண விலையில் டீசல் தரவேண்டும்!

## மாணவர் போக்குவரத்து சேவை சங்கம்

கொழும்பு, ஏப். 02

டீசலை நிவாரண விலையில் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அகில இலங்கை அனைத்து மாகாண பாடசாலை மாணவர் போக்கு வரத்துச் சேவை சங்கத்தின் தலை வர் ருவன் பிரசாத் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பின் போதே அவர் இதனை கூறினார். அவர் மேலும் தெரி விக்கையில் -

எரிபொருள் விலை குறைப் பின்போது டீசல் விலை குறைக் கப்படும் என நாம் எதிர்பார்த் தோம். ஆனால் அந்த விடயம் இடம்பெறாமையை இட்டு கவலையடைகின்றோம். இதன் காரணமாக நாம் பாதிப்புக்குள் ளாவதுடன், இந்த சேவையை முன்னெடுக்க முடியாத நிலையே ஏற்படும். ஆகவே எதிரகாலத் தில் இந்த சேவையிலிருந்து விலக எதிர்பார்த்துள்ளோம்.

ஆகவே பெற்றோலை போன்று டீசலையும் நிவாரண விலையில் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
02.04.2025 புதன்கிழமை
பிலவ வருடம், பங்குனி 19

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## என்ன மாயாஜாலம் உள்ளது?

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய குற்றவாளிகள் இரண்டு மாதத்துக்குள் சட்டத்தின் முன்னால் நிறுத்தப்படுவர் என்று ஜனாதிபதி கூறுகின்றார். உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு சர்வதேச இஸ்லாமிய பயங்கரவாத அமைப்பான ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு உரிமை கோரியிருந்தது. தவிர, உலகெங்கும் ஒரு கருத்தியல் அடிப்படையில் தற்கொலை தாக்குதல்களை மேற்கொள்ளும் வலிமையுடன் இஸ்லாமிய பயங்கரவாத அமைப்புகள் மட்டும்தான் இருக்கின்றன. ஒரு காலத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் தற்கொலைத் தாக்குதல்களை செய்யும் ஆற்றலுடன் இருந்தது உண்மை - ஆனால் விடுதலைப் புலிகளின் வீழ்ச்சிக்கு பின்னர் அந்த விடயம் முடிந்துவிட்டது.

இந்த நிலையில் ஐ.எஸ்.ஐ.எஸ் கருத்தியலால் ஈர்க்கப்பட்ட காத்தான்குடியை தளமாகக் கொண்டிருந்த ஒரு குழுவினரே தாக்குதலில் ஈடுபட்டனர். பொதுவாக இஸ்லாமிய பயங்கரவாத வலையமைப்புக்கள் ஒரு மையத்திலிருந்து வரும் தலைமையின் கீழ் இயங்குவதில்லை - அதுவே அவர்களது சர்வதேச விஸ்தரிப்பிற்கான வலுவான காரணமாகவும் இருக்கின்றது. குறிப்பிட்ட கருத்தியலை ஏற்றுக்கொண்டவர்கள் உலகெங்கும் தங்களது சுயவிருப்பிற்கும் தெரிவுக்கும் ஏற்றவாறு பணியாற்ற முடியும்.

இந்த அடிப்படையில்தான் ஒஸாமா பின்லேடனின் அமெரிக்க, இஸ்ரேலிய எதிர்ப்பை அடிப்படையாகக் கொண்டு உலகின் பல பகுதிகளிலும் தாக்குதல்கள் இடம்பெற்றன. இதன் தொடர்சியும் மிகவும் பயங்கரமான விரிவாக்கம்தான் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் எழுச்சியும் அதன் தொடர்பற்ற வலையமைப்பின் விரிவாக்கமுமாகும். இந்தப் பின்புலத்தில்தான் இலங்கையிலும் தற்கொலைத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

இந்தத் தாக்குதலை மேற்கொண்டவர்கள் யார் என்பதை அனைவரும் அறிந்திருந்தாலும் இதனுடன் உள்ளூர் அரசியல்வாதிகளுக்குத் தொடர்பிருப்பதாகக் கூறியதன் பின்னணியில் சர்ச்சைகள் எழுந்தன. குறிப்பாக கோட்டாபய ராஜபக்ஷவும் அவருக்கு நெருக்கமான சில படையதிகாரிகளும் இதனுடன் தொடர்புபட்டிருப்பதான சர்ச்சைகள் எழுந்தன. இந்தப் பின்புலத்தில்தான் குற்றவாளிகளை சட்டத்தின் முன்னால் நிறுத்த வேண்டும் என்னும் வாதம் தலைதூக்கியது. குறிப்பாக இந்த விடயத்தை அதிகம் கர்தினால் மல்கம் ரஞ்சித்தே அதிகம் ஊடகங்களில் தலையங்கமாக்கினார்.

இந்தப் பின்புலத்தில்தான் தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் தேர்தல் காலத்தில் ஒரு வாக்குறுதியை வழங்கியது. தாங்கள் அதிகாரத்திற்கு வந்தால் குற்றவாளிகளை சட்டத்தின் முன்னால் நிறுத்துவோம் என்று குறிப்பிட்டனர். அடிப்படையில் இது ஒரு சர்வதேச விவகாரம். இதனை எவ்வாறு உள்ளூர் நீதிமன்றத்தில் கையாள முடியுமென்பது முதலாவது பிரச்சினை - அப்படியே முடிந்தாலும் கூட யாரைத் தண்டிப்பது? உண்மையானவர்களை தண்டிக்க முடியாது ஏனெனில் அவர்களது வலையமைப்போ உலகளாவியது.

ஜனாதிபதி அநுரகுமார தனது பதவியேற்பின் போது தன்னால் மாயாஜாலம் செய்ய முடியாது என்று கூறியிருந்தார். இந்த நிலையில் உயிர்த்த ஞாயிறு தாக்குலுடன் தொடர்புடைய குற்றவாளிகளை சட்டத்தின் முன்னால் நிறுத்துவதற்கு என்ன மாயாஜாலம் வைத்திருக்கின்றார்?

# ஓட்டோ கட்டணம் மாற்றமில்லை

கொழும்பு, ஏப். 02

எரிபொருள் விலைகள் குறைந்திருந்தாலும், முச்சக்கர வண்டி கட்டணத்தில் மாற்றத்தை ஏற்படுத்த வாய்ப்பில்லை என மேல் மாகாண முச்சக்கர வண்டி சாரதிகள் மற்றும் உரிமையாளர்களின் சங்கத்தின் தலைவர் லலித் தர்மசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எரிபொருள் விலைகள் குறைந்திருந்தாலும், முச்சக்கரவண்டிக் கட்டணத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாத நிலையே காணப்படுகின்றது.

முச்சக்கரவண்டி கட்டணங்களைக் குறைப்பதை விட, முறையான ஒழுங்கு முறை மூலம் பொதுமக்களுக்கு மிகவும் பயனுள்ள சேவையை வழங்க அரசாங்கம் தலையிடவேண்டும்

பெற்றோல் லீற்றருக்கு 10 ரூபாய் குறைந்திருக்கிறது. சாதாரணமாக ஒரு லீற்றருக்கு 20 கிலோமீற்றர் வரை முச்சக்கரவண்டியை செலுத்த முடியும்.. அப்படியென்றால், 5 சதத்தை கூட நாம் வைத்துக் கொள்ளாமல், 10 ரூபாவை கொடுத்தாலும், கிலோமீற்றருக்கு 50 சதம் குறைக்க முடியும். ஆனால் இது நடைமுறையில் சாத்தியமில்லை. தற்போதும் கூட கட்டண நிர்ணயம் இல்லாமல், நினைத்த நினைத்தவாறு கட்டணம் வசூலிக்கும் முச்சக்கரவண்டிகள் நாடு முழுவதும் உள்ளனர. அதனால், 50 சதமோ அல்லது 10 ரூபாயோ குறைத்தாலும் அது தீர்வாகாது. மிகவும் பயனுள்ள, நம்பகமான முச்சக்கரவண்டி சேவையை உருவாக்குவதுதான் எங்கள் முதல் நோக்கம். இந்த 10 ரூபாய் குறைப்பின் மூலம் முச்சக்கரவண்டி கட்டணத்தை குறைப்பது சாத்தியமற்ற விடயமாகும் - என்றார்.

(அ)

# மியன்மார், தாய்லாந்து தூதரகங்களுக்கு சென்று அனுதாபம் வெளியிட்டார் சஜித்!

கொழும்பு, ஏப். 02

மியன்மார் மற்றும் தாய்லாந்தில் ஏற்பட்ட கடுமையான நிலநடுக்கத்தால் அங்கு ஏராளமான சொத்துக்கள் அழிந்ததோடுஇ பல உயிரிழப்புக்களும் பதிவாகியுள்ள நிலையில் - எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று கொழும்பிலுள்ள மியன்மார் மற்றும் தாய்லாந்து தூதரகங்களுக்கு விஜயம் செய்து இந்த அனர்த்தம் தொடர்பாக தனது வருத்தத்தையும் கவலையையும் தெரிவித்தார்.

மியன்மார் மற்றும் தாய்லாந்து தூதுவர்கள் தலைமையிலான தூதுக்குழுவினரைச் சந்தித்து எதிர்க்கட்சித் தலைவர் ஆறுதல் தெரிவித்தார்.

ஒரு நாடு என்ற வகையில் மியன்மார் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளுக்குத் தேவையான பூரண ஒத்துழைப்பைப் பெற்றுத் தருவேன் என அவர் இங்கு மேலும் தெரிவித்தார்.

(அ)

## இருதய நோயாளர் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 02

நாளுக்கு நாள் நாட்டில் இருதய நோயினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை உயர்வடைந்து வருவதாக இருதயநோய் நிபுணர் வைத்தியர் கோட்டாபய ரணசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு இதனைத் தெரிவித்தார்.

தினசரி 175 முதல் 200 பேர் வரை இருதய நோயாளர்களாக அடையாளங் காணப்படுவதாக வைத்தியர் கோட்டாபய ரணசிங்க கூறினார்.

உணவுப் பழக்கவழக்கங்கள் மற்றும் வாழ்க்கை முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களே இருதய நோய்க்கு வழிவகுப்பதாக இருதயநோய் நிபுணர் வைத்தியர் கோட்டாபய ரணசிங்க சுட்டிக்காட்டினார். (அ)

## "மொஹமட் ருஷ்டி புனர்வாழ்வு அளிக்கப்பட வேண்டிய ஒருவர்"

கொழும்பு, ஏப். 02

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள மொஹமட் ருஷ்டி புனர்வாழ்வு அளிக்கப்பட வேண்டியவர் என ஜம்மியதுல் உலமா சபை தெரிவித்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஸ்ரிக்கர் ஒட்டியதற்காக அவர் கைது செய்ப்படவில்லை. அவரை விசாரிக்கும்போது, அவர் அடிப்படைவாதக் கொள்கைகளால் பாதிக்கப்பட்டுள்ளார் என தெளிவானது. இலங்கையின் பல இடங்களிலும் இத்தகைய ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டுள்ளன. இதனால் அவரைப் பற்றிய விசாரணையை தீவிரமாக மேற்கொணடோம்.

விசாரணையின் முடிவில், அவர் தீவிரவாத நோக்கங்களைக் கொண்டவராக இருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டதால் கைது செய்யப்பட்டார்.

இவர் உலமா சபையில் முன்னிலைப்படுத்தட்டார். பின்னர் உலமா சபை உண்மையில் அவர் ஒரு சாதாரண முஸ்லிமின் நிலையைத் தாண்டிய நிலை இருப்பதாகவும் அவருக்கு புனர்வாழ்வளிக்கப்பட வேண்டும் என்றும் கூறியது - என்றார். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரை - 02 புதன்கிழமை
குரோதி வருடம் - பங்குனி 19
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : பஞ்சமி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் அனாவசிய பேச்சை தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுடன் சச்சரவுகள் வரும். உத்தியோகத்தில் அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம்.

**இடபம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**மிதுனம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும்.

**கடகம்**
உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். பிள்ளைகள் நம்பிக்கை தருவார்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார். சாதித்துக் காட்டும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எந்த காரியத்தை தொட்டாலும் இரண்டு மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**துலாம்**
கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். உத்தியோகத்தில் சகஊழியர்களால் ஆதாயமும் உண்டு. திறமைகள் வெளிப்படும் நாள்.

**விருட்சிகம்**
கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். உறவினர் நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். உத்தியோகத்தில் அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**தனுசு**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள். எதிலும் தெளிவு பிறக்கும் நாள்.

**மகரம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். புது வேலை கிடைக்கும். வியாபாரம் தழைக்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**கும்பம்**
துணிச்சலாக சில முக்கியமுடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்றுத் தீரும். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும். தைரியம் கூடும் நாள்.

**மீனம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கும். தோற்றப்பொலிவுக் கூடும். புது நட்பு மலரும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். அலுவலகத்தில் மரியாதை கூடும். நன்மை நடக்கும்.

அரசு நியாயமாக செயல்படுமாக இருந்தால்

# வெலிக்கடை படுகொலையையும் விசாரணைக்கு எடுக்க வேண்டும்

வவுனியா, ஏப். 02

அநுர அரசு நியாயமாக செயல்படுமாக இருந்தால் பட்டலந்த போன்று வெலிக்கடை படுகொலையையும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.



வவுனியாவில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பட்டலந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அது இவ்வளவு காலமும் தூசு தட்டப்படாமல் இருந்து ஜே.வி.பி. அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் பாராளுமன்றத்துக்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. உண்மையில் அதனை நாம் வரவேற்கின்றோம். அதேநேரம், 1983 ஆம் ஆண்டு கலவரம் ஏற்படுத்தப்பட்டது. அப்போது, வெலிக்கடை சிறைச்சாலையில் பலர் படுகொலை செய்யப்பட்டனர். இதன் பின்னணியில் தான் இயக்கங்களுக்கு தமிழ் இளைஞர்கள் அதிகளவில் சென்றனர்.

ஆகவே, ஒரு கேள்வியை இந்த அரசாங்கத்திடம் கேட்ட விரும்புகின்றேன். பட்டலந்த விசாரணை ஆணைக்குழு அறிக்கையை பாராளுமன்றத்தில் கொண்டு வந்ததைப் போன்று ஜே. ஆர். ஜெயவர்த்தன ஆட்சிக் காலத்தில் வெலிக்கடை சிறையில் காடையர்கள் வெளியிலிருந்து உள்ளே அழைக்கப்பட்டு பலர் படுகொலை செய்யப்பட்டனர். அவர்களுடைய உடல்கள் எங்கே புதைக்கப்பட்டது என்பது கூட தெரியாமல் இருக்கிறது. எனவே, இந்த அரசு நியாயமாக செயல்படுமாக இருந்தால் வெலிக்கடை படுகொலையையும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

பட்டலந்த பிரச்னை எல்லாவற்றையும் விட 1983 கலவரம் கூடுதலான இழப்புக்களை சந்தித்தது. இது வரலாற்றில் முதன்மையான இடத்தில் உள்ள படுகொலை. இதை அரசாங்கம் விசாரணைக்கு கொண்டு வந்து, அதற்கான நீதி நியாயத்தை வெளிப்படுத்த வேண்டும் என மக்கள் சார்பாகவும், வெலிக்கடையில் படுகொலை செய்யப்பட்ட போராளிகள் சார்பாகவும் கோரிக்கையாக முன் வைக்கின்றேன்"- என்றார்.

(எ-10)





தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் யாழ். கோண்டாவில் இந்துக் கல்லூரியில் முன்னெடுக்கப்பட்ட 24 ஆவது புத்தக அரங்க விழாவின் ஓர் அங்கமாக கடந்த 29 ஆம் திகதி நடைபெற்ற இரண்டாம் நாள் மாலை நிகழ்வின் காட்சிகள்...

# 6 மாதம் கோமாவிலிருந்த பிரதேச செயலர் யாழ்.போதனா மருத்துவமனையில் மரணம்

யாழ்ப்பாணம், ஏப். 02

விபத்தில் சிக்கி கோமா நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த பிரதேச செயலர் ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்தார். மடு - கற்கிரந்தகுளம் பகுதியைச் சேர்ந்த யேசுதாஸ் பெரேரா (வயது - 35) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

குறித்த நபர் கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் அநுராதபுரம் வீதியில், மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோது நடந்து சென்றவர் மீது மோதினார். இதன்போது, நடந்து சென்ற நபர் சிறிய காயங்களுடன் உயிர் தப்பிய நிலையில் குறித்த நபர் கோமா நிலைக்குச் சென்றார்.

பின்னர் மதவாச்சி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து அநுராதபுரம் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு 2 மாதங்கள் கோமா நிலையில் சிகிச்சை பெற்று வந்தார். அதன்பின்னர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு 4 மாதங்கள் கோமா நிலையில் சிகிச்சை பெற்றார்.

இருப்பினும், சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் அவர் உயிரிழந்தார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

(எ-05)

# "மூச்சடங்கா இரவுகள்" திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழா நடைபெற்றது

யாழ்ப்பாணம், ஏப். 02

மூச்சடங்கா இரவுகள் திரைப்பட இசை வெளியீட்டு விழா மற்றும் கலைஞர்கள் கௌரவிப்பு விழா என்பன கடந்த 29ஆம் திகதி கொடிகாமத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.




கந்தசாமி லோககாந்தன் இயக்கத்தில் அன்பு மயில் தயாரிப்பில் மூச்சடங்கா இரவுகள் திரைப்படம் உருவாகியுள்ளது.

இலங்கையின் அதிகமான இடங்களில் படமாக்கப்பட்ட மூச்சடங்கா இரவுகள் ஈழத் தமிழர்களின் வாழ்வியலை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டதுடன் இந்த திரைப்படத்தில் பல இளம் கலைஞர்களுக்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

விருந்தினர்களால் மூச்சடங்கா இரவுகள் திரைப்படத்தின் இசை வெளியீடு செய்யப்பட்டதுடன் கலைஞர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

(எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் 1209 ஏக்கர் காணிகள் படைகளின் வசம்!


கிளிநொச்சி, ஏப். 02

**கிளிநொச்சியில் 1209. 22 ஏக்கர் மக்களின் காணிகளை முப்படையினரும் ஆக்கிரமித்து வைத்துள்ளனர் என்று வடக்கு மாகாண காணி உரிமைக்கான மக்கள் அமைப்பின் தலைவர் இரத்தினசிங்கம் முரளிதரன் தெரிவித்துள்ளார்.**

மேலும், கிளிநொச்சி மாவட்டத்தில் மக்களின் காணி கள் பல விடுவிக்கப்படாது இராணுவத்தினர் வசம் உள்ளது. கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் 653. 65 ஏக்கர், கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் 180. 38 ஏக்கர், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் 116. 61ஏக்கர், பூநகரி பிரதேசெயலர் பிரிவில் 248. 18 ஏக்கர் என 1209.22 ஏக்கர் காணிகள் முப்படைக ளின் வசமுள்ளன.

இந்தக் காணி கள் மக்க ளுக்கே மீளவும் வழங்கப்பட வேண்டும் - என்றார். (ஐ)

# முழங்காவில் ஆரம்ப பாடசாலை முன்பாக பெற்றோர் கவனவீர்ப்பு



கிளிநொச்சி, ஏப். 02

முழங்காவில் ஆரம்ப வித்தி யாலயத்துக்கு முன்பாக மாண வர்களின் பெற்றோர் நேற்று கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள்மீது சமூகவலைதளத்தில் அவதூறு பரப்பப்படுகிறது என்றும் இது தொடர்பில் முழங்காவில் கல்வி திணைக்களம், பொலிஸ் நிலையம் என்பவற்றில் முறைப் பாடுகள் அளித்த போதிலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் கூறியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த கவனவீர்ப்புப் போராட்டம் காரணமாக குறித்த பாடசாலையின் கற்றல் செயல்பாடுகள் நேற்று முழு மையாக பாதிக்கப்பட்டன என் பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## புதுமுக மாணவனை தாக்கிய 4 மாணவர்களுக்கு வகுப்பு தடை!

### விசாரிக்கவும் குழு அமைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 02

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடப் புதுமுக மாண வன் ஒருவர் பகிடிவதைக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவத் துடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படும் நான்கு இரண்டாம் வருட சிரேஷ்ட மாணவர்களுக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன், இந்த சம்பவம் தொடர்பில் நிறுவனமயப்ப டுத்தப்பட்ட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று விஞ்ஞான பீடாதிபதி பேரா சிரியர் பு.ர விரஜன் தெரிவித் துள்ளார்.

விஞ்ஞான பீடப் புதுமுக மாணவன் ஒருவர் பகிடிவதை காரணமாக உட்காயங்களுக்கு உள்ளாகி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவது தொடர்பில் அவரிடம் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில், "எமது பீடத்தை சேர்ந்த புது முக மாணவன் ஒருவர் சிரேஷ்ட மாணவர்களால் தாக்கப்பட் டமை தொடர்பில் நாம் மிகுந்த வருத்தமடைகின்றோம். சம்ப வம் தொடர்பாக அறிந்தவுடன் பல்கலைக்கழக சட்ட நிறை வேற்று அதிகாரி, மாணவர் ஒழுக்காற்று அதிகாரி ஆகியோ ருடன் நானும் மருத்துவம னைக்கு சென்று பாதிக்கப் பட்ட மாணவனை நேரில் பார்வையிட்டதுடன், மருத் துவ நிபுணர்களிடமும் கலந்து ரையாடினோம்.

பாதிக்கப்பட்ட மாணவ னின் பெற்றோரிடமிருந்தும், மாணவனிடமிருந்தும் பெறப் பட்ட முதல்கட்டத் தகவலின் அடிப்படையில் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படும் இரண்டாம் வருடத்தைச் சேர்ந்த நான்கு சிரேஷ்ட மாணவர்களுக்கு உட னடியாக செயல்படும் வகை யில் வகுப்புத் தடை விதிக்கப் பட்டுள்ளது.

துணைவேந்தரின் அறிவுறுத்தலுக்கமைய மூன்று பேர் கொண்ட விசாரணைக் குழு அமைக்கப்பட்டு விசார ணைகள் ஆரம்பிக்கப்பட்டுள் ளன.

பகிடிவதை மற்றும் மாண வர் ஒழுக்காற்று நடைமுறைகள் தொடர்பான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை, பல்கலைக்கழக உபவிதிகளுக்கு அமைய, கிடைக்கப்பெறும் விசாரணைக் குழுவின் பரிந்துரைகள் பல்க லைக்கழக மாணவர் ஒழுக்காற் றுச் சபையின் ஊடாக பேர வைக்குச் சமர்ப்பிக்கப்படும். பேரவைத் தீர்மானத்துக்கமைய குற்றமிழைத்த மாணவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் படும்.

மேலும், சம்பவம் பல்கலைக் கழகத்துக்கு வெளியே இடம் பெற்றிருப்பதால் பாதிக்கப் பட்ட மாணவனின் தந்தை வழங்கிய முறைப்பாடுகளுக்கமைய பொலிஸ் மற்றும் மனித உரிமை கள் ஆணைக்குழு மேற்கொள்ளும் சட்ட நடவடிக்கைகளுக்கு பல் கலைக்கழகம்பூரண ஒத்து ழைப்பை வழங்கும் - என்றும் கூறினார். (ஐ)

## மூளாய் முருகன் பெருந்திருவிழா!

வடமராட்சி, ஏப். 02

மூளாய் ஸ்ரீ முத்துக்குமார சுவாமி ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா இன்று புதன் கிழமை காலை 9.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம் பமாகிறது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ள இந்த பெருந் திருவிழாவில் எதிர்வரும் 10ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த் திருவிழாவும் அடுத்த நாளான வெள்ளிக்கிழமை தீர்த் தத் திருவிழாவும் நடைபெற வுள்ளன. (ஐ-2)


# வனஜீவராசிகள் திணைக்களத்தினர் ஆளுகை பகுதியை பார்வையிட்டனர்!

வடமராட்சி, ஏப். 02

வடமராட்சி கிழக்கு பிரதே சத்தில் வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் நேற்றைய தினம் தமது ஆளுகைக்கு உட் பட்ட இடங்களை பார்வை யிட்டு எல்லைப்படுத்தியுள் ளனர்.

இதன்போது, வனஜீவரா சிகள் திணைக்கள அதிகாரிகள், இங்குள்ள வளங்கள் சூறை யாடப்படுகின்றன. இது தொடர்பாக எந்த தகவல் தெரிந்தாலும் எமக்கு உடனடியாக தெரியப்படுத் துங்கள் - அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் படும் என்று மக்களிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

அத்துடன், எமது ஆளு கைக்கு உட்பட்ட இடங்களை முக்கிய கட்டடங்கள் கட்டு



வதற்கு தம்மை உரிய முறையில் நாடினால் தாம் அனுமதி கொடுப்போம் என்றும் திணைக்கள அதிகாரிகள் இதன்போது தெரிவித்தனர். (ஐ-05)

# குப்பை கொட்டுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை!

### சுற்றுச்சூழல் பொலிஸார் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 02

பொதுவெளியில் குப்பை களை கொட்டுபவர்கள் தொடர் பில் அவர்களை அடையாளப்ப டுத்தினால் தம்மால் அவர்க ளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என்று சுற்றுச் சூழல் பொலிஸார் தெரிவித்துள் ளனர்.

வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகனுக்கும், உள் ளூராட்சி மன்றங்களின் செய லாளர்களுக்கும் இடையிலான சந்திப்பிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

இந்த சந்திப்பில், செம்மணி, வல்லைவெளி, கைதடி - கோப் பாய் வீதிகளில் கோழிக்கழிவு கள் முறையற்ற வகையில் கொட்டப்படுவது தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டது. இதே போன்று பல்வேறு இடங்க ளிலும் குப்பைகளைக் கொட் டுவது தொடர்பிலும் தெரியப் படுத்தப்பட்டது.

இவ்வாறு கழிவுகளை கொட் டுபவர்களையும் குப்பைகளைக் கொட்டுபவர்களையும் அடை யாளப்படுத்தித் தருமாறும் தம்மால் அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்க முடி யும் எனவும் சுற்றுச்சூழல் பொலிஸார் இதன்போது குறிப்பிட்டனர்.

இதேவேளை, சந்தைகளை அண்மித்த பகுதிகளிலும் சில பிரதான வீதிகளிலும் முறை யற்ற விதத்தில் வாகனங்கள் தரித்து நிறுத்தப்படுவதாகவும் இதனால் நெரிசல்கள் ஏற்படு கின்றது என்றும் உள்ளூராட்சி மன்றங்களின் செயலர்கள் சுட் டிக்காட்டினர்.

பொலிஸார் பற்றாக்குறை உள்ளது. குறிப்பாக பாடசாலை நாட்களில் பாடசாலை சூழலில் கடமையில் ஈடுபடவேண்டியி ருப்பதால் இந்த நிலைமை இருக் கிறது என்றும் இதன் போது, பொலிஸார் பதிலளித்தனர். (ஐ)

## மியன்மார் மக்களுக்கு உதவ நிவாரண குழு தயார் நிலையில்

### இராணுவம் அறிவிப்பு

கொழும்பு, ஏப். 02

மியன்மாரில் நிலநடுக்கத் தால் பாதிக்கப்பட்ட மக்க ளுக்கு உதவுவதற்காக நிவாரண குழுவை இலங்கையிலிருந்து அனுப்ப தயாராகவுள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

மியன்மாரால் விடுக்கப் பட்ட கோரிக்கைக்கு அமை வாக அதனை நிறைவேற் றுவதற்கு தயாராகவுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் வருண கமகே கூறினார்.

மியன்மாருக்கு அனுப்பப் படவுள்ள இராணுவத்தினரின் எண்ணிக்கை அந்த நாட்டின் கோரிக்கை பிரகாரம்



தீர்மானிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே மியன்மா ருக்கு அனுப்புவதற்கு மருத்து வர்கள் குழு ஒன்றும் தயார் நிலையில் உள்ளதாக சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுடனான ஒப்பந்தங்களை அரசு பகிரங்கப்படுத்தவேண்டும்!

## ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து




கொழும்பு, ஏப். 02

**இந்தியாவுடனான நட்புறவை பேணுவதில் எவ்வித பிரச்னையும் இல்லை. ஆனால், நாடு என்ற ரீதியில் பிறிதொரு நாட்டுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தம் தொடர்பில் மக்களுக்கு வெளிப்படுத்தப்பட வேண்டும். இதன்படி, இந்தியாவுடன் செய்யப்படவுள்ள ஒப்பந்தங்கள் தொடர்பில் அரசாங்கம் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் - இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க வலியுறுத்தினார்.**

கண்டியில் ஊடகங்களிடம் பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை வருகையின்போது கையெழுத் திடப்படவுள்ளதாகக் கூறப்படும் ஒப்பந்தங்கள் குறித்து பல்வேறு செய்திகள் வெளியாகியுள்ளன. ஆனால், அவை தொடர்பில் நாட்டுக்கோ அல்லது பாராளுமன்றத்துக்கோ அரசாங்கம் வெளிப்படுத்தவில்லை. தேசிய மக்கள் சக்தியின் தலைவர் எதிர்க்கட்சியிலிருந்தபோது இராஜதந்திர ஒப்பந்தங்கள் தொடர்பில் கூறிய கதைகள் இன்றும் எமக்கு நினைவில் இருக்கின்றன.

அந்த சந்தர்ப்பத்தில் எந்தவொரு ஜனாதிபதிக்கும் 5 ஆண்டுகால வரையறைக்கு அப்பால் ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் உரிமை கிடையாது எனக் குறிப்பிட்டிருந்தனர். அவ்வாறெனில் இந்திய பிரதமர் நாட்டுக்கு வருகை தந்து கையெழுத் திடவுள்ள ஒப்பந்தங்கள் என்ன? அவை தொடர்பில் மறைப்பதைவிட பகிரங்கமாகக் குறிப்பிடுவதே உசிதமானதாகும்.

சம்பூர் மின்னுற்பத்தி நிலையம் தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்படவுள்ளதாக எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. மேலும் அதானி நிறுவனம் இரத்து செய்துள்ள வேலைத் திட்டத்தை மீண்டும் அவர்களுக்கே வழங்குவது தொடர்பி லும் அவதானம் செலுத்தப்பட்டுள்ள தாகவும் தெரியவருகிறது. எனவே, இவற்றின் உண்மை தன்மையை உடனடியாக நாட் டுக்கு வெளிப்படுத்துவமாறு வலியுறுத்துகிறோம் - என்றார். (ஐ)

# இலங்கை மருத்துவர்கள் குழு மியன்மார் செல்ல தயார்நிலை



கொழும்பு, ஏப். 02

மியன்மாரில் பூகம்பத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்க மருத்துவக்குழு ஒன்றை அனுப்புவதற்குத் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

மியன்மார் அரசாங்கம் தேவையான அனுமதியை வழங்கியவுடன், அனர்த்த மீட்புப் பணிகளில் அனுபவமுள்ள விசேட மருத்துவர்கள் மற்றும் தாதியர்கள் உள்ளடங்கிய மருத்துவ நிபுணர்கள் குழு ஒன்று தயாராக இருப்பதாக சுகாதார அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கையிலேயே இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

"மியன்மாருக்கு அத்தியாவசிய மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் தேவையான பொருட்களை வழங்க அரசாங்கம் தீவிரமாக செயல்பட்டு வருகிறது.

மேலதிகமாக களத் தில் உதவி வழங்க விசேட மருத்துவக் குழு ஒன்றை நாங்கள் நியமித்துள்ளோம்.

வெளிவிவகார அமைச்சு மூலம் உதவி வழங்க எங்கள் தயார் நிலையை மியன்மார் தூதரகத்துக்குத் தெரிவித்துள்ளோம். மருத்துவக் குழு தேவைப்படும்போது அறிவிப்பதாக அவர்கள் எங்களுக்கு தெரிவித்துள்ளனர். " என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# போதைப்பொருள் விற்ற தம்பதியர் கைதாகினர்!

கொழும்பு, ஏப். 02

போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்த கணவனும் மனைவியும் அநுராதபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அநுராதபுரம் பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின்பேரில் அநுராதபுரம் - சிராவஸ்திபுர பிரதேசத்தில் விடுதி ஒன்றில் தங்கியிருந்த தம்பதியரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்கள் களுத்துறை - பாணந்துறையை சேர்ந்த 33, 32 வயதுடையவர்களாவர்.

சந்தேகநபர்களிடமிருந்து 55 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



**இமாலயன் பழுப்பு நிற கரடிகள் தெகிவளை மிருகக்காட்சி சாலைக்கு ஒரு மாதத்துக்கு முன்னர் கொண்டுவரப்பட்டன. இவை தற்போது பொதுமக்களின் பார்வைக்கு விடப்பட்டுள்ளன.**

# மியன்மாருக்கு உதவிகளை இலங்கை வழங்கவேண்டும்

## முன்னாள் ஜனாதிபதி ரணில்



கொழும்பு, ஏப். 02

நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள மியன்மாருக்கு உதவிகளை வழங்குவதற்கு இலங்கை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

மியன்மாரில் ஏற்பட்ட நிலநடுக்கத்துக்கு இலங்கை அரசு வருத்தம் தெரிவித்துள்ளது. மியன்மார் இலங்கையுடன் நெருங்கிய உறவுகளை கொண்ட ஒரு நாடு. தேரவாத பௌத்தத்துடன் எங்களுக்கும் மியன்மாருக்கும் நெருங்கிய உறவு உள்ளது.

அமரபுர மற்றும் ராமான்ய பீடங்கள் இரண்டும் மியன்மாருடன் தொடர்புகளை கொண்டுள்ளன.

தேரவாத பௌத்தர்களுடன் நெருங்கிய உறவுகளை கொண்ட ஒரு நாட்டில் இது போன்ற பேரழிவு ஏற்படும் போது நாம் அவர்களுக்கு தொடர்ந்து ஆதரவளிக்க வேண்டும் என்று பரிந்துரைக்கிறேன்.

இன்று, இந்தியா, தாய்லாந்து, மலேசியா போன்ற நாடுகளும், அவுஸ்திரேலியா, சீனா போன்ற தொலைதூர நாடுகளும்கூட மியன்மாருக்கு உதவி செய்கின்றன. அவ்வாறெனில் நாமும் அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

எனது பரிந் துரை என்னவென்றால், இலங்கை இராணுவத்தின் மருத்துவர்கள் அடங்கிய ஒரு குழுவை உடனடியாக மியன் மாருக்கு அனுப்ப வேண்டும்.

கடந்த ஆண்டு, இலங்கை அரசாங்கம் காஸா மோதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு மில்லியன் டொலர்களை நன்கொடையாக வழங்கியது. இந்த நேரத்தில், மியன்மாருக்கு சில நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்துக்கு நான் முன் மொழிகிறேன் - என்றுள்ளது. (ஐ)

# பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொறுப்பை எனக்கு தாருங்கள்

## கேட்கிறார் சரத் பொன்சேகா!

கொழும்பு, ஏப். 02

பயங்கரவாத அமைப்புகளை தோற்கடித்து நாட்டை மீட்க முடியுமெனில், பாதாள உலகக் குழுக்களை அழிப்பதொன்றும் எனக்கு பெரிய விடயமல்ல. களத்தில் இறங்கி தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவற்கான பொறுப்பு வழங்கப்பட்டால் நிச்சயம் அதனை செய்வேன் என்று பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேக்கா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நிகழ்வு ஒன்றில் நேற்றுமுன்தினம் பங்கேற்ற அவர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

இராணுவத்தினரை பாதுகாப்பு பணிகளில் அமர்த்துமளவுக்கு இன்று தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை.

ஆனால், பாதாள உலகக் குழுக்களின் செயல் பாடுகள் தலைதூக்கியுள்ளன. அவர்கள் இன்றும் மிகவும் சுதந் திரமாக தமது செயல்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர். இது மிகவும் ஆபத்தான சூழலாகும்.

எனவே மக்கள் அச்சமின்றி சுதந்திரமாக வாழக்கூடிய சூழலை அரசாங் கம் உருவாக்க வேண்டும்.

பாதாள உலகக் குழுக்களை கட்டுப்படுத்துவதில் அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது. அனுபவம்மிக்கவர்கள் களத்தில் இறங்கினால் மாத்திரமே இந்த நிலைமையைக் கட்டுப்படுத்த முடியும். அரசாங்கத்துடன் இணைவதற்கு எனக்கு எந்த அவசியமும் இல்லை.

களத்தில் இறங்கி தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவற்கான பொறுப்பு வழங்கப்பட்டால் நிச்சயம் அதனை செய்வேன்.

ஆனால் ஆலோச கர் என்ற பெயரில் அலுவலகத் தையும் வாகனங்களையும் வழங்கும் பொறுப்புகளை ஒருபோதும் ஏற்க மாட்டேன் - என்றார். (ஐ)

# யுவதியின் சடலம் மீட்பு

கொழும்பு, ஏப். 02

நீர்த்தேக்கத்திலிருந்து யுவதி ஒருவரின் சடலம் நேற்று செவ்வாய்க்கிழமை மீட்கப்பட்டது.

நுவரெலியா - தலவாக்கலை - மேல்கொத்மலை நீர்த்தேக்கத் திலிருந்தே இந்த சடலம் மீட்கப்பட்டது. டயகம பிரதேசத்தை சேர்ந்த 22 வயது யுவதியே இவ் வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

குறித்த யுவதி கடந்த சனிக் கிழமை முதல் காணாமல் போயி ருந்தார் என்று அவரின் குடும்பத் தினர் டயகம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்த நிலையில், யுவதி தற் கொலை செய்து கொண்டாரா அல்லது கொலை செய் யப்பட்டு நீர்ததேக்கத்தில் வீசப்பட்டாரா என்ற கோணத் தில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# போலி வீசாவை பயன்படுத்தி கிரீஸ் செல்ல முயன்றோர் கைது!

கண்டி, ஏப். 02

போலி வீசாவை பயன்படுத்தி கிரீஸ் நாட்டுக்குத் தப்பிச் செல்ல முயன்ற 3 பங்களாதேஷ் பிரஜைகள் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

22, 24 மற்றும் 25 வயதுடைய மூன்று பங்களாதேஷ் பிரஜைகளே கடந்த ஞாயிற்றுக் கிழமை கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் மூவரும் பஹ்ரைனுக்கு செல்வதற்காக கடந்த ஞாயிற்றுக்கிழமை கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு சென்றுள்ளனர்.

இதன்போது, சந்தேக நபர்கள் மூவரும் சோதனை நடவடிக்கைகளுக்காக தங்களின் ஆவணங்களை விமான நிலைய அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளனர்.

அந்த ஆவணங்களில் சந்தேகமடைந்த அதிகாரிகள் மேற்கொண்ட சோதனையில் அவை போலியானவை என்பது தெரிய வந்தது. இதையடுத்து அவர்கள் மூவரும் கைது செய்யப்பட்டனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தை வாக்கு வங்கிக்கு பயன்படுத்துவது தவறு

## சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 02

**உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் சம்பவத்தை தேர்தல் காலத்தில் வாக்கு வங்கிக்காக பயன்படுத்துவது முறையற்றது. ஏப்ரல் 21 ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதி வெளிப்படுத்தும் உண்மையை நாங்களும் எதிர்பார்த்துள்ளோம் - என்று ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்வு ஒன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் அரசியல் கட்டமைப்பின்மீது நாட்டு மக்கள் கொண்டிருந்த வெறுப்பை முன்னிலைப்படுத்தியே தேசிய மக்கள் சக்தி ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல் பிரசாரங்களை மக்கள் மத்தியில் முன்னெடுத்தது.

தேசிய மக்கள் சக்தி மக்களுக்கு சிறந்த கொள்கை களை முன்வைக்கவில்லை. அதன் விளைவை இன்று அரசாங்கம் எதிர்கொள்கிறது.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் சம்பவத்துக்கு பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரை ஏப்ரல் 21 ஆம் திகதிக்கு முன்னர் நாட்டு மக்களுக்கு அறிவிப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். நாட்டு மக்கள் 6 வருடகாலமாக உண்மையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே உண்மைகளை பகிரங்கப்படுத்த வேண்டும்.

தேர்தல் காலத்தில் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் சம்பவத்தை வாக்கு வங்கிக்காக பயன்படுத்திக் கொள்வது முறையற்றது.

முன்னாள் இரா ஜாங்க அமைச்சர் பிள்ளையா னின் செயலாளரான ஆசாத் மௌலானா குண்டுத்தாக்குதல்கள் சம்பவம் குறித்து தனியார் ஊடகத்துக்கு பல விடயங்களை குறிப்பிட்டிருந்தார். இவரை நாட்டுக்கு அழைத்து வருவதாகவும் அரசாங்கத் தரப்பில் குறிப்பிடப்பட்டது. ஏப்ரல் 21ஆம் திகதிக்கு முன்னர் அரசாங்கம் ஆசாத் மௌலானாவை அரசாங்கம் நாட்டுக்கு அழைத்து வருமா என்பது தெரியவில்லை.

குண்டுத்தாக்குதல்கள் தொடர்பான இரகசிய தகவல் அப்போதைய அரசாங்கத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் முன்கூட்டியதாகவே அறிவிக்கப்பட்டதாக ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் குறிப்பிடுவது முட்டாள்தனமானாது.

இந்த குண்டுத்தாக்குதல் சம்பவம் தான் 2019 மற்றும் 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் வெற்றியை தீர்மானித்தது.

குண்டுத்தாக்குதல் தொடர்பான விசாரணைகள் அரசியலுக்கு அப்பாற்பட்ட வகையில் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதை அரசாங்கத்திடம் வலியுறுத்துகிறேன். உண்மையை எதிர்பார்த்துள்ள மக்களின் எதிர்பார்ப்பை அரசியலாக்கக்கூடாது - என்றார். (ஐ)

# போதைப்பொருள் வியாபாரி கைது!

கொழும்பு, ஏப். 02

ஹெரோயின் போதைப் பொருளுடன் சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மேற்கு மாகாண வடக்கு குற்றப்புலனாய்வு பிரிவை சேர்ந்த அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சோதனை மேற்கொண்டபோதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் களனி பகுதியை சேர்ந்த 24 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

சந்தேக நபரிடமிருந்து 13 கிராம் 500 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருள், போதைப்பொருள் விற்பனை மூலம் பெறப்பட்டதாக சந்தேககிக்கப்படும் 11 இலட்சத்து 4 ஆயிரத்து 300 ரூபா பணம், சுமார் 40 இலட்சம் ரூபாய் மதிப்புடைய தங்க ஆபரணங்கள், 02 மின்னணு தராசுகள் மற்றும் 01 கைபேசி என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும், மேற்கு மாகாண வடக்கு குற்றப்புலனாய்வு பிரிவினர் குறித்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ரயில் சேவை தாமதம்!

கொழும்பு, ஏப். 02

பிரதான ரயில் மார்க்கத்தில் ரயில் சேவைகளில் நேற்று சில மணி நேரம் தாமதம் ஏற்பட்டது.

பொல்கஹவெலவிலிருந்து கொழும்பு நோக்கிச் பயணித்த ரயிலில் இயந்திர கோளாறு ஏற் பட்டமையால் பிரதான மார்க் கத்தில் ரயில் சேவைகள் பாதிக் கப்பட்டன.

வல்பொல பகுதியின் அருகே ரயிலில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இராணுவத்தினர்மீது கைவைப்பதற்கு இலங்கை மக்கள் அனுமதிக்கமாட்டராம்

## தேசிய சுதந்திர முன்னணி சொல்கிறது

கொழும்பு, ஏப். 02

இலங்கையின் முன்னாள் படை பிரதானிகளுக்கு விதித்துள்ள தடையை பிரித்தானியா உடனடியாக நீக்கவேண்டும். போரை முடிவுக்கு கொண்டு வந்த இராணுவத்தினர் மீது கைவைப்பதற்கு இலங்கையின் இறையாண்மையை நேசிக்கும் மக்கள் இடமளிக்க போவதில்லை - என்று தேசிய சுதந்திர முன்னணி கூறியுள்ளது.

முன்னாள் படை தளபதிகளுக்கு எதிரான தடையை கண்டித்து தேசிய சுதந்திர முன்னணி கொழும்பிலுள்ள பிரித்தானிய தூதரகம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டது. இதன்போது கருத்து வெளியிட்ட அந்தக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர குறிப்பிடுகையில்,

முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட உட்பட முன்னாள் இராணுவத் தளபதிகளான சவேந்திர சில்வா, ஜகத் ஜெயசூரிய ஆகியோருக்கும், புலிகள் அமைப்பை அழிப்பதற்கு இலங்கை இராணுவத்துக்கு ஒத்துழைப்பு வழங்கிய கருணாவுக்கும் பிரித்தானியா தடை விதித்துள்ளதை வன்மையாக கண்டிக்கிறோம்.

இந்த நாட்டில் தமிழ், சிங்களம் மற்றும் முஸ்லிம் சமூகத்தினரை விடுதலைப் புலிகள் அமைப்பினர் படுகொலை செய்தனர். நாட்டுக்கு எதிரான பயங்கரவாத யுத்தத்தையே இராணுவத்தினர் முடிவுக்குக் கொண்டு வந்தனர். நாட்டு மக்கள் இன்று சுதந்திரமாக வாழ்வதற்கு இராணுவத்தினர் தமது உயிரை பணயம் வைத்து போராடினார்கள். அதனால் தான் ஒட்டுமொத்த மக்களும் சுதந்திரமாக வாழ்கிறார்கள்.

மிலேச்சத்தனமான விடுதலை புலிகள் பயங்கரவாத அமைப்பையே இராணுவத்தினர் முடிவுக்கு கொண்டு வந்தனர். தமது உயிரை பயணம் வைத்த இராணுவத்தினரையே பிரித்தானியா இன்று வாங்குகிறது. பிரித்தானிய இராணுவம் சர்வதேச நீதிமன்றத்தில் குற்றவாளியாக்கப்பட்டுள்ளது. இவர்கள்தான் இன்று இலங்கையின் மனித உரிமைகள் பற்றி அக்கறை கொண்டுள்ளார்கள். தடை விதிக்கிறார்கள். பிரித்தானியாவின் ஒருதலைப்பட்சமான செயல்பாட்டை தேசிய இனம் என்ற அடிப்படையில் வன்மையாக கண்டிக்கிறோம் - என்றார். (ஐ)

# 4 வாகனங்கள் மோதிய விபத்தில் 4 பேர் காயம்!


கொழும்பு, ஏப். 02

தெற்கு அதிவேக வீதியில் 4 வாகனங்கள் மோதிய விபத்தில் 2 வெளிநாட்டு பிரஜைகள் 4 பேர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் இரண்டு வெளிநாட்டு பிரஜைகள் உட்பட நால்வர் காயமடைந் துள்ள நிலையில் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளனர் என்றும் பொலி ஸார் மேலும் தெரிவித்தனர். (ஐ)

# மர ஆலை எரிந்து நாசம் பல கோடி ரூபாய் நட்டம்!



கண்டி, ஏப். 02

மர ஆலை ஒன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை தீ விபத்து ஏற்பட்டதில் பல கோடி ரூபாய் பெறுமதியான சொத்துகள் எரிந்து நாசமாகின என்று தெரிவிக்கப்பட்டது.

கண்டி - கட்டுகஸ்தோட்டையில் இடம்பெற்ற இந்தத் தீ விபத்தில், மர ஆலையில் இருந்த பல கோடி ரூபாய் மதிப்பிலான இயந்திரங்களும் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களும் தீயில் எரிந்து நாசமாகின.

தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில், கட்டுகஸ்தோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# ஜனாதிபதியின் பேச்சுகளை நம்புவதற்கு நாம் தயாரில்லை!

## ஹிருணிகா தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 02

ஜனாதிபதித் தேர்தலும் பொதுத் தேர்தலும் நிறைவடைந்தவுடன் அமைதி காத்த ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தற்போது உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இலக்கு வைத்து உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் பேச ஆரம்பித்திருக்கிறார்.

அவரின் பேச்சுகளை நம்புவதற்கு நாம் தயாராக இல்லை. முடிந்தால் முன்னாள் அமைச்சர் டிரான் அலஸை கைது செய்யுமாறு அரசாங்கத்துக்கு சவால் விடுப் பதாக ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு நேற்று முன்தினம் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், சமூக வலைத்தளங்கள் ஊடாக ஏனைய கட்சியினர் மீது சேறு பூசினால் மாத்திரம் போதும் என்று அரசாங்கம் எண்ணுகிறது. ஆனால், இன்று நிலைமை முற்றாக மாறியுள்ளது.

கடந்த தேர்தல்களைப் போன்று இம்முறை பொய் கூறி வெற்றி பெற முடியாது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகள் நிச்சயம் மாற்றத்தை ஏற்படுத்தும் என்று நம்புகின்றோம்.

இன்று பெருமளவில் அரசியல் பழிவாங்கல்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலை இலக்காகக் கொண்டு அந்த சந்தர்ப்பத்தில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர் பில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க கருத்துகளை வெளி யிட்டார்.

அதன் பின்னர் அது குறித்து எந்த கருத்துகளும் வெளியிடப்படவில்லை. ஆனால் தற்போது மீண்டும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இலக்காகக் கொண்டு உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் பேச ஆரம்பித்திருக்கின்றார்.

ஏப்ரல் 21ஆம் திகதிக்கு முன்னர் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடையவர்களது பெயர்கள் வெளியிடப்படும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். ஆனால், நாம் அவற்றை நம்புவதற்கு தயாராக இல்லை.

முடிந்தால் குற்றச் சாட்டுக்களின் அடிப்படையில் டிரான் அலஸை கைது செய் யுமாறு அரசாங்கத்துக்கு சவால் விடுக்கிறேன் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அரசு வேட்பாளர் வீட்டின்மீது பெற்றோல் குண்டு வீசி தாக்குதல்!

மட்டக்களப்பு, ஏப். 02

**மட்டக்களப்பு மாவட்டம் வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திக்கோடை பகுதியிலுள்ள இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் வேட்பாளரின் வீட்டின் மீது நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு பெற்றோல் குண்டு வீசி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.**

இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போரதீவுப் பற்று பிரதேச சபைக்காக போட்டியிடும் அருள்ராஜா பிரேமாகரன் என்பவரின் வீட்டின் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

குறித்த நபர் திங்கட்கிழமை இரவு மரண வீடு ஒன்றுக்கு சென்றிருந்த நிலையில் வீட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அந்த நேரத்தில் வீட்டில் மனைவி, பிள்ளைகள் உறங்கிக் கொண்டிருந்ததாகவும் பிரேமாகரன் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதல் காரணமாக வீட்டிலிருந்த யாருக்கும் எந்த ஆபத்தும் ஏற்படவில்லையென வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் வெல்லாவெளி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

வீட்டின் கூரையின் மீது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ள நிலையில் வீட்டின் உட்பகுதியில் பொருத்தப்பட்டிருந்த சீற் எரிந்துள்ளதாகவும் வேறு சேதங்கள் ஏற்படவில்லையெனவும் பொலிஸார் கூறினர்.

(எ)

# இந்து ஸ்வயம்சேவக சங்கத்தின் வதிவிட பண்புப் பயிற்சி முகாம்



நற்பிட்டிமுனை, ஏப். 02

இந்து ஸ்வயம்சேவக சங்கத்தின் ஏற்பாட்டில் 7 நாட்கள் வதிவிட பண்புப் பயிற்சி முகாம் கடந்த 23 ஆம் திகதி ஆரம்பமாகி 30 ஆம் திகதி நிறைவு பெற்றது.

இவ் வதிவிட பண்புப் பயிற்சி முகாம் அம்பாறை மாவட்டம் நற்பிட்டிமுனை சிவசக்தி மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

மாணவர்களின் நேர முகாமைத்துவம், சிறந்த ஆளுமை விருத் தியை வெளிக் கொண்டுவரும் முகமாகவும், அவர்களுக்கு இடையில் நற்பண்பை வளர்க்கவும் இந்த ஆன்மீக பயிற்சி வழங்கப்பட்டது.

இந்த பயிற்சியில் பல கிராமத்திலும் இருந்து 50 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

அவர்கள் ஏழு நாட்களும் கற்றுக்கொண்ட பயிற்சிகளை இறுதி நிகழ்வில் செய்து காண்பித்தனர்.

(எ- 07)

# புதிய நிர்வாகம் தெரிவு

காரைதீவு, ஏப். 02

மட்டு. - அம்பாறை விஞ்ஞான ஒன்றியத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் நடைபெற்றது.

இதன்போது, புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது. இதன்படி, தலைவராக தி. கோபிநாத்தும், செயலாளர்களாக (அம்பாறை) இ. ஜனுசனும் (மட்டக்களப்பு) ம. சர்ஜித்தும் பொருளாளராக ம. திலக்சனும் உபதலைவராக ம. டிசாந்தும் உபசெயலாளராக ந. சதீஸ்காவும் கணக்காய்வாளராக ந. லோகிதனும் ஆலோசகர் மற்றும் இணைப்பாளராக வ. யதுர்ஷனும் தெரிவு செய்யப்பட்டனர்.

(எ-07)

# துப்பாக்கி மற்றும் தோட்டாக்களுடன் சம்மாந்துறையில் ஒருவர் சிக்கினார்!

சம்மாந்துறை, ஏப். 02


சொட் கண் வகை துப்பாக்கி மற்றும் 10 ரி - 56 ரக துப்பாக்கி தோட்டாக்களுடன் சந்தேக நபரை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புறநகர் பகுதியில் இடம்பெற்றுள்ளது. சம்மாந்துறை பொலிஸ் நிலைய பெருங்குற்றப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையின் போது அனுமதிப்பத்திரம் இல்லாத "பொரதொளகாய் சொட் கண்" வகையைச் சேர்ந்த துப்பாக்கியும் தோட்டாக்களுடனும் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட மலையடிக்கிராமம் 04 பகுதியைச் சேர்ந்த 66 வயதுடைய சந்தேக நபர் ஓய்வு பெற்ற முன்னாள் சிவில் பாதுகாப்புப் படை உத்தியோகத்தர் ஆவார்.

மேலும், சந்தேக நபர் உள்ளிட்ட சான்றுப்பொருட்களை சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எச். ஜி. டி. எஸ். அமரசிங்கவின் பணிப்புரைக்கமைய கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம். கே. இப்னு அசாரின் அறிவுறுத்தலுக்கமைய சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலத்தின் வழிகாட்டுதலில் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பெருங்குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி கே.சதீஸ்கர் தலைமையிலான பொலிஸாரால் குறித்த சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



(எ- 01)

### உரிய விசாரணையின்றி விடுதலையான

# அரசியல்வாதிகளுக்கு எதிராக மிகவிரைவில் சட்ட நடவடிக்கை

மட்டக்களப்பு, ஏப். 02

கடந்த காலங்களில் உரிய விசாரணைகளை மேற்கொள்ளாமல் விடுதலை செய்யப்பட்ட அரசியல்வாதிகள் மற்றும் கிழக்கு மாகாணத்தில் இருக்கும் சில நபர்களுக்கு எதிராக மிகவிரைவில் சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பான விசேட கூட்டம் கடந்த 29 ஆம் திகதி பழைய கச்சேரி மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்பின்னர், ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாங்கள் யாரையும் அரசியல் ரீதியாக பழிவாங்கவில்லை. இதற்கு முதலிலே அரசியல் ரீதியாக பல்வேறுபட்ட அரசியல்வாதிகள் பழிவாங்கப்பட்ட வரலாறு இருக்கின்றது. 1950,60,70, 80, 90, 2000 இற்கு பிற்பட்ட காலமாக இருக்கலாம். இப்படிப்பட்ட பல்வேறு விடயங்கள் நாட்டிலே நடந்திருக்கின்றன.

1977 ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் பொலிஸ் திணைக்களத்துக்கு ஒரு விடுமுறையை வழங்கி மக்களுக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் சிறுபான்மையினருக்கும் எதிராக வன்முறையை கட்டவிழ்த்துவிட்டது. அப்படிப்பட்ட நாட்டிலேயே நாங்கள் வாழ்கின்றோம்.

எனவே, நாங்கள் பழிவாங்கும் எண்ணத்தில் செயல்பட்டிருந்தோம் என்றால் எவ்வளவே வேலையை செய்திருக்கலாம். ஆனால், நாங்கள் சட்டரீதியாக ஒப்புவிக்கப்படுவதன் பிரகாரம் நாங்கள் அவர்களுக்கு எதிராக சரியான முறையில் சட்ட நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

கடந்த காலங்களில் உரிய வகையில் விசாரணைகளை மேற்கொள்ளாமல் விடுதலை செய்யப்பட்ட அரசியல்வாதிகள் கூட எதிர்வரும் காலங்களில் குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் இருக்கும் சில நபர்களுக்கு எதிராக மிகவிரைவில் சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இதுவும் அரசியல் பழிவாங்கல் அல்ல. பிழை செய்திருந்தால் உங்களுக்கு எதிராக அரசாங்கம் என்ற அடிப்படையில் சட்டத்தை நடைமுறைப்படுத்துவோம். இதற்கு தான் மக்கள் எங்களுக்கு அனுமதியளித்துள்ளனர்.

பட்டலந்தை ஆணைக்குழு தொடர்பான விவாதம் இப்போதாவது வந்தது என்பது சந்தோஷமானது. சம்பவம் துக்கமான விடயமாக இருந்தாலும் அரசியல் ரீதியாக இப்போது பெரும் விவாதமாக எடுக்கப்படுகின்றது

இந்த நாட்டில் மக்கள் விடுதலை முன்னணிக்கு நடந்தது என்று பார்ப்பதை விட இது ஒரு உதாரணம். இந்த நாட்டில் சட்டவிரோதமான படுகொலைகள், அரச ஒடுக்கு முறைகள் போன்ற பல்வேறுபட்ட விடயங்கள் நடைபெற்றன என சொல்வதற்கான ஒரு உதாரணம் இது.

இது நீண்ட ஒரு கறுப்பான யுகத்தில் ஒரு உதாரணம். இது குறித்து பாராளுமன்றத்தில் விவாதம் நடைபெற்று வருவதுடன் நடைபெற்ற எல்லா விடயங்கள் தொடர்பிலும் விசாரிக்கப்படும்.

அரசாங்கத்தை பொறுப்பெடுக்கும் போது உண்மை அறியும் ஆணைக்குழுவை நியமித்து இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுவோம் என தெரிவித்தோம். அதற்காக மக்கள் 5 வருடத்துக்கு ஆட்சியை தந்துள்ளனர்.

நாட்டில் ஜனநாயக ரீதியாக ஒரு பெரும் மாற்றத்தை கொண்டுவந்துள்ளோம். இவ்வாறு எந்தவொரு நாட்டிலும் ஜனநாயக ரீதியாக மாற்றம் இடம்பெறவில்லை. அந்த அடிப்படையில் இன்று பெரும் மாற்றம் வந்துள்ளது. இருந்தபோதும் ஆங்காங்கே பழைய ஆட்சியாளர்களின் எச்சங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இருந்த போதும் ஒட்டு மொத்தமாக மக்கள் இந்த மாற்றத்தை உணர்ந்து கொண்டுள்ளனர்.

வாழ்க்கைச் சுமை படிப்படியாக குறைந்து வருகின்றது. ஊழல் - மோசடி இல்லாத அரசியல் கலாசாரம் உருவாகியுள்ளது. கடந்த காலங்களில் அமைச்சரோ அல்லது ஒரு பாராளுமன்ற உறுப்பினரோ பல வாகனங்களில் பயணித்தனர். அதற்கு டீசல், பெற்றோல் மக்களின் பணத்தில், ஆனால், இன்று நாங்கள் வாகனத்தை குறைத்து பாதுகாப்பு இல்லாமல் செய்தமையால் யாரே ஒருவருடைய சாப்பாட்டு தட்டில் உணவு அதிகரிக்கப்பட்டுள்ளது.

எனவே, எங்களால் மக்களுக்கு வரப்பிரசாரங்கள் இயல்பாக கிடைத்துக் கொண்டிருக்கின்றன.

இந்த நாட்டில் இடம்பெற்ற எல்லாவிதமான குற்றச் செயல்கள் தொடர்பிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். நாட்டில் மீண்டும் குரோதத்தை வளர்க்க இடமளிக்க மாட்டோம். அந்த வகையில் எல்லோரும் வாழக்கூடிய நாட்டை உருவாக்குவோம்"- என்றார்.

(எ)



அம்பாறை மாவட்டம், காரைதீவு சிறீமன் நாராயணன் ஆலய நவக்கிரக மூர்த்திகளுக்கும் சீதாப்பிராட்டியார் சமேத இராமபிரான் மற்றும் இலக்குமணன், அனுமன் விக்கிரங்களுக்கான கும்பாபிஷேக நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

(படங்கள் :-வி.ரி. சகாதேவராஜா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயார் நிலையில் ஏவுகணைகள்

# அணு ஆயுத ஒப்பந்தம் நிராகரிப்பு அமெரிக்கா - ஈரான் நேரடி மோதல்

தெஹ்ரான், ஏப்.02

**அமெரிக்கா உத்தரவுகள் வழங்குவதையும், எச்சரிக்கை விடுப்பதையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறி அணு ஆயுத ஒப்பந்தம் குறித்த நேரடி பேச்சு வார்த்தைகளை ஈரான் நிராகரித்ததால் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கடும் அதிருப்தி அடைந்துள்ளார்.**

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்றதைத் தொடர்ந்து பல்வேறு அதிரடி உத்தரவுகளை பிறப்பித்து வருகிறார். அவ்வகையில், அணு ஆயுத உற்பத்தி விவகாரத்தில் ஈரான் மீது கடும் அழுத்தம் கொடுக்கப்படும் என அறிவித்திருந்தார்.

வளைகுடா நாடுகளில் ஒன்றான ஈரான் அணு ஆயுதங்களை அதிகளவில் உற்பத்தி செய்து வருவதாக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் குற்றஞ்சாட்டி வருகின்றன. இந்த குற்றஞ்சாட்டை ஈரான் தொடர்ந்து மறுத்து வருகிறது.

இந்த நிலையில், ஈரான் அணு ஆயுதங்களை தயாரிப்பதற்கு தடைவிதிக்கும் விதமாக புதிய அணுசக்தி ஒப்பந்தத்துக்கான பேச்சுகளை நடத்த வலியுறுத்தி ஈரானுக்கு ட்ரம்ப் கடிதம் எழுதியிருந்தார். அதில் அமெரிக்காவுடனான நேரடி ஒப்பந்தத்துக்கு ஈரான் முன்வரவேண்டும் என கூறியிருந்தார். அமெரிக்காவுடனான ஒப்பந்தத்துக்கு மறுப்பு தெரிவித்தால் ஈரான் மீது கடுமையான தடைகள் விதிக்கப்படும் எனவும் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

ட்ரம்பின் இந்த கடிதத்துக்கு பதிலளித்த ஈரான் ஜனாதிபதி மசூத் பெஷ்கியன், "அமெரிக்கா உத்தரவுகள் வழங்குவதையும், எச்சரிக்கை விடுப்பதையும் ஏற்றுக்கொள்ள முடியாது. நாங்கள் ஒருபோதும் உங்களிடம் (அமெரிக்கா) நேரடியாக பேச்சுகள் நடத்த மாட்டோம். அதே சமயம் மத்தியஸ்தர்கள் மூலம் பேச்சுகள் நடத்த தயாராக இருக்கிறோம்" என்று பதிலடி கொடுத்தார்.

மேலும், ஓமான் மூலமாக ஈரான் அரசாங்கம் ட்ரம்புக்கு பதில் கடிதமும் அனுப்பியுள்ளது. அதில், அதிகபட்ச அழுத்தம் மற்றும் இராணுவ அச்சுறுத்தல்களின் கீழ் அமெரிக்காவுடன் நேரடி பேச்சுகளில் ஈடுபடக்கூடாது என்பதே தங்கள் நாட்டின் கொள்கை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேரடி பேச்சுகளை ஈரான் நிராகரித்தது, ட்ரம்புக்கு கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இதுபற்றி தொலைபேசி வாயிலாக ஒரு செய்தியாளருக்கு கருத்து வெளியிட்ட ட்ரம்ப், "அவர்கள் (ஈரான்) எங்களுடன் ஒப்பந்தம் செய்யவில்லை என்றால், குண்டு வீசி தாக்குவோம், அவர்கள் இதற்கு முன்பு கண்டிராத வகையில், இந்தத் தாக்குதல் இருக்கும்" என்று மீண்டும் எச்சரிக்கை விடுத்தார்.

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு செய்தது போல் நான் அவர்களுக்கு இரண்டாம் நிலை வரிகளை விதிக்க வாய்ப்புள்ளது என்றும் ட்ரம்ப் கூறினார்.

ட்ரம்ப் இவ்வாறு கூறிய சில மணி நேரங்களில் ஈரான் தனது செயல்பாடுகள் மூலம் பதிலளித்துள்ளது. அதாவது ஏவுகணைகளை தயார் நிலையில் வைக்கத் தொடங்கியிருக்கிறது.

உலகெங்கிலும் அமெரிக்காவுடன் தொடர்புடைய நிலைகளை குறிவைத்து தாக்கும் திறனைக் கொண்ட ஏவுகணைகளை ஈரான் இராணுவம் தயார் நிலையில் வைத்துள்ளதாக அரசு ஊடகமான தெஹ்ரான் ரைம்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது. ஏவுதலுக்கு தயார் நிலையில் உள்ள ஏவுகணைகளில் பெரும்பாலான ஏவுகணைகள், நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் உள்ள நிலத்தடி வசதிகளில் அமைந்துள்ளன என்றும், அவை வான் வழித் தாக்குதல்களை தாங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

அணு ஆயுத ஒப்பந்த விவகாரத்தில் அமெரிக்காவும் ஈரானும் தங்கள் நிலைப்பாட்டில் உறுதியாக இருப்பதால் பதற்றம் அதிகரித்துள்ளது. (எ)

# பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான்கானுக்கு நோபல் பரிசு?

இஸ்லாமாபாத், ஏப். 02

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான்கானுக்கு நோபல் பரிசு வழங்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் 2018 முதல் 2022 வரை பிரதமராக இருந்தவர் இம்ரான்கான். முன்னாள் கிரிக்கெட் வீரரான இவர் பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன் சாப் என்ற கட்சியை தொடங்கி அரசியலில் ஈடுபட்டார். இம்ரான்கானுக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்க பரிந்துரை செய்யப்பட்டு உள்ளது. நோர்வே அரசியல் கட்சியான பார்டியட் சென்ட்ரமின் சட்டத்தரணிகள் பிரிவு இந்தப் பரிந்துரையை வழங்கியுள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்சி தனது எக்ஸ் தளத்தில், "பாகிஸ்தானில் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கு முன்னாள் பிரதமர் இம்ரான்கான் செய்த பணிகளுக்காக, அவருக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்க பரிந்துரைத்து இருக்கிறோம்" என கூறியுள்ளது.

நம்பிக்கை இல்லா தீர்மானம் மூலம் பதவியை இழந்த இம்ரான்கான் ஊழல் உள்ளிட்ட வழக்குகளில் சிக்கி கடந்த 2023ஆம் ஆண்டு முதல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். (எ)

# இந்தியாவில் அணு உலை அமைக்க அமெரிக்க நிறுவனத்துக்கு அனுமதி

வாஷிங்டன், ஏப். 02

இந்தியாவில் புதிய அணு உலைகள் அமைக்க அமெரிக்க நிறுவனத்துக்கு அந்த நாட்டு அரசு அனுமதி அளித்துள்ளது.

இந்திய - அமெரிக்க சிவில் அணுசக்தி ஒப்பந்தம் 2007ஆம் ஆண்டு அப்போதைய இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ் புஷ் ஆகியோரால் கையெழுத்திடப்பட்டது.

இது தொடர்பான விரிவான பேச்சுகள், சட்டம் மற்றும் ஒழுங்குமுறை அனுமதிகள், தொழில்நுட்ப அனுமதிகள், பொறுப்பு விதிகள் மற்றும் வரைபடங்கள் தயாரிப்பு ஆகியவற்றைத் தொடர்ந்து சுமார் 20 ஆண்டுகளுக்கு பிறகு இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதற்கான அனுமதி கிடைத்துள்ளது.

இதன்படி, இந்தியாவில் அணு உலைகள் அமைக்க இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கிருஷ்ணா பி. சிங் என்பவருக்கு சொந்தமான ஹோல்டெக் இன்டர்நஷனல் என்ற அமெரிக்க நிறுவனத்துக்கு அந்த நாட்டின் எரிசக்தி துறை நேற்று முன்தினம் அனுமதி வழங்கியுள்ளது.

# ஜேர்மன் நிறுவனம் அனுப்பிய ரொக்கெட் கடலில் விழுந்தது



ஒஸ்லோ, ஏப். 02

நோர்வேயிலிருந்து ஜேர்மனின் தனியார் விண்வெளி நிறுவனம் அனுப்பிய ரொக்கெட் கடலில் விழுந்து நொறுங்கியது.

விண்வெளிக்கு செயற்கைக்கோள் அனுப்புவதில் உலக நாடுகள் பலவும் போட்டிபோடுகின்றன. இந்தப் போட்டியில் தற்போது பல தனியார் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனங்களும் இணைந்துள்ளன.

அந்தவகையில் ஜேர்மனியைச் சேர்ந்த இசார் ஏரோஸ்பேஸ் என்ற தனியார் விண்வெளி நிறுவனமானது நோர்வேயிலிருந்து சோதனை அடிப்படையில் ஸ்பெக்ட்ரம் என்ற ரொக்கெட்டை நேற்று முன்தினம் ஏவியது. ஐரோப்பாவிலிருந்து ஏவப்பட்ட முதல் ரொக்கெட் இதுவாகும்.

திட்டமிட்டபடி அந்த ரொக்கெட் விண்ணை நோக்கி சீறிப்பாய்ந்தது. 30 நொடிகள் வானில் பறந்த அந்த ரொக்கெட் பின்னர் சுழன்றடித்துக் கொண்டு கடற்பகுதியில் விழுந்தது. எனினும் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை ரொக்கெட் எட்டியதாக இசார் ஏரோஸ்பேஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது. (எ)

# ரபா நகரில் மிகப்பெரியளவில் தாக்குதலுக்கு இஸ்ரேல் திட்டம்

## மக்களை வெளியேறுமாறு இராணுவம் உத்தரவு

காஸா, ஏப். 02

காஸாவின் ரபா நகரில் மிகப் பெரியளவில் தரைவழித் தாக்குதலை நடத்த இஸ்ரேல் இராணுவம் திட்டமிட்டுள்ளது.

இதனால், ரபா நகரிலிருந்து பொதுமக்கள் உடன் வெளியேற வேண்டும் என்று இஸ்ரேல் இராணுவம் உத்தரவிட்டுள்ளது.

முன்னதாக கடந்த ஆண்டு மே மாதம், ரபா நகரில் இஸ்ரேல் மிகப்பெரிய அளவிலான தாக்குதலை நிகழ்த்தியது. இந்த நிலையில், நேற்று முன்தினம் ரமழான் பண்டிகை தினத்தில் ரபா நகர மக்களை வெளியேறுமாறு இஸ்ரேல் உத்தரவு பிறப்பித்துள்ளது. (எ)

# "பெருங்கடலின் ஒரே பாதுகாவலர்" யூனுஸ்க்கு இந்திய அரசு பதிலடி

புதுடில்லி, ஏப். 02

"நாங்கள் மட்டுமே பெருங்கடலின் ஒரே பாதுகாவலர்" என்று பங்களாதேஷ் இடைக்கால தலைவர் முகமது யூனுஸ், சீனாவில் பேசியது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு இந்திய அரசு தரப்பில் பதிலடி கொடுக்கப்பட்டுள்ளது.



பங்களாதேஷ் இடைக்கால அரசின் தலைமை ஆலோசகரான முகமது யூனுஸ், கடந்த 30 ஆம் திகதி முதல் சீனாவில் 4 நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். அந்த நாட்டில் அவர் கூறுகையில், இந்தியாவின் 7 வடகிழக்கு மாநிலங்கள் நிலப்பரப்பால் சூழப்பட்டுள்ளன. இந்திய பெருங்கடலை அடைவதற்கு அவர்களிடம் வழி கிடையாது.

நாங்கள் மட்டுமே பெருங்கடலின் ஒரே பாதுகாவலர் என்று கூறினார். இந்தியாவை பற்றி சீனாவில் அவர் பேசியது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இதுபற்றி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பொருளாதார ஆலோசனை குழுவின் உறுப்பினர் மற்றும் பொருளாதார நிபுணரான சஞ்சீவ் சன்யால் கூறுகையில், இந்தியாவின் உள்நாட்டு புவியியல் அமைப்பை பற்றி தூண்டும் வகையில் பேசுவதற்கான பின்னணி என்ன? என கேள்வி எழுப்பினார்.

பங்களாதேஷில் முதலீடு செய்ய சீனாவுக்கு வரவேற்பு தெரிவிக்கும்போது, 7 இந்திய மாநிலங்களின் நிலப்பரப்பு பற்றி பேசுவதற்கான முக்கியத்துவம் என்ன? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

இதேபோன்று, பங்களாதேஷுக்கான முன்னாள் இந்தியத் தூதுவர் வீணா சிக்ரி கூறுகையில், வடகிழக்கு மாநிலங்கள் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதிகள் என வலியுறுத்தியதுடன், யூனுஸ் தெரிவித்தவை அதிர்ச்சியளிக்கின்றன.

இதுபோன்று பேசுவதற்கு அவருக்கு எந்தவித உரிமையும் இல்லை. வடகிழக்கு இந்தியாவில் இருந்து வங்காள விரிகுடாவுக்கு செல்வதற்கு பங்களாதேஷ் அரசுடன் பேச்சுகளில் ஈடுபட்டு வருகிறோம். இதற்கு முறையான ஒப்பந்தங்கள் உள்ளன- என்றார்.

வடகிழக்கு இந்தியாவுக்கு இணைப்புக்கான உரிமைகளை கொடுப்பதில் பங்களாதேஷுக்கு விருப்பம் இல்லையென்றால், அதற்கு ஈடாக பெற கூடிய உரிமைகளை அந்த நாடு எதிர் பார்க்கக் கூடாது என்றும் கூறினார்.

இதேபோன்று, இந்தியாவின் பாதுகாப்பு நிபுணரான பிரவுல் பக்சி கூறும்போது, வங்காளதேச நாட்டை உருவாக்கியது இந்தியா. ஆனால் அதற்காக எந்தவித பலனையும் நாம் எடுத்து கொள்ளவில்லை. இந்தியாவின் 7 மாநிலங்களுடன் சீனாவை தொடர்புபடுத்தி, சிக்கல்களை உருவாக்கலாம் என யூனுஸ் நினைக்கிறார். அதனை சீனா ஏற்கனவே செய்து வருகிறது.

சீனா மட்டுமின்றி பல்வேறு அமைப்புகளும் வடகிழக்குக்கு எதிராக வேலை செய்து கொண்டிருக்கின்றன. இந்திய அரசு முன்பே நடவடிக்கையில் இறங்கி விட்டது. இந்தியா என்ன செய்யப் போகிறது என்பது யூனுஸுக்கும் கூட நன்றாகத் தெரியும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொல்கத்தாவை வீழ்த்தி மும்பை முதல் வெற்றி!

முமம்பை, ஏப். 02


கொல்கத்தாவுக்கு எதிரான போட்டியில் மும்பை அணி அபார வெற்றி பெற்றது.

18ஆவது ஐ.பி.எல். தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இதில் மும்பையில் உள்ள வான்கடே மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 12ஆவது லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் - கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதின.

கொல்கத்தாவின் தொடக்க வீரர்களாக டி கொக் மற்றும் சுனில் நரைன் களமிறங்கினர். இதில் சுனில் நரைன் ஓட்டமின்றியும், டி கொக் ஓர் ஓட்டத்திலும் ஆட்டமிழந்தனர். தொடர்ந்து களமிறங்கிய கொல்கத்தா வீரர்கள் மும்பையின் அபார பந்து வீச்சை தாக்குப் பிடிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்களை இழந்தனர்.

இதில், ரஹானே 11, அங்க்ரிஷ் ரகுவன்ஷி 26, வெங்கடேஷ் ஐயர் 3, ரிங்கு சிங் 17, மனிஷ் பாண்டே 19 ஓட்டங்களில் வெளியேறினர். இதனால் கொல்கத்தா அணி 80 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்களை இழந்தது. தொடர்ந்து அண்ட்ரே ரஸல் மற்றும் ரமன்தீப் சிங் ஜோடி சேர்ந்தனர். இதில் ரஸல் 5 ஓட்டங்களிலும், அடுத்து வந்த ஹர்ஷித் ராணா 4 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.


இறுதியில் கொல்கத்தா அணி 16. 2 ஓவர்களில்




அனைத்து விக்கெட்களையும் இழந்து 116 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது. தொடர்ந்து 117 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் மும்பை விளையாடியது.

அந்த அணி, 12.5 ஓவர்களில் இலக்கை கடந்து 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. ரிக்கெல்டன் அதிகபட்சமாக 62 ஓட்டங்கள் எடுத்தார். இதன் மூலம், மும்பை அணி நடப்பு தொடரில் தனது முதல் வெற்றியை பதிவு செய்தது.

(எ)



# மியாமி ஓபின் ரென்னிஸ் சம்பியனானார் மென்சிக்

மியாமி, ஏப். 02

மியாமி ஓபின் ரென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் மென்சிக் சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

பல முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்ற இந்தத் தொடர் அமெரிக்காவில் நடைபெற்றது. இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதிப் போட்டிக்கு செர்பியாவின் ஜோகோவிச் செக்குடியரசின் ஜாகுப் மென்சிக் ஆகியோர் முன்னேறினர். இறுதிப்போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் மென்சிக் 7-6 மற்றும் 7-6 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானார். (எ)



# 8,000 ஓட்டங்கள் கடந்த சூர்யகுமார் யாதவ்!

மும்பை, ஏப். 02

ரி - 20 கிரிக்கெட் போட்டியில் 8,000 ஓட்டங்களை சூர்யகுமார் யாதவ் கடந்துள்ளார்.

ஐ. பி. எல். தொடரில் மும்பையில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் - கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதின. இதில், மும்பை அணி 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

அந்த அணி தரப்பில் அறிமுக வீரர் அஸ்வனி குமார் 4 விக்கெட்கள் வீழ்த்தினார். இந்த ஆட்டத்தில் மும்பையின் அதிரடி ஆட்டக்காரரான சூர்யகுமார் யாதவ் 9 பந்துகளில் 27 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார்.

இந்த நிலையில், சூர்யகுமார் யாதவ் ரி - 20 கிரிக்கெட்டில் மாபெரும் சாதனை பட்டியல் ஒன்றில் இணைந்துள்ளார். அதாவது ரி - 20 கிரிக்கெட் வரலாற்றில் 8000 ஓட்டங்களை கடந்த இந்தியர்கள் பட்டியலில் 5ஆவது வீரராக சூர்யகுமார் (8,007 ஓட்டங்கள்) இணைந்துள்ளார்.

இந்தப் பட்டியலில் விராட் கோலி (12,976), ரோஹித் சர்மா (11,851), ஷிகர் தவான் (9,797), சுரேஷ் ரெய்னா (8,654) ஆகியோர் முதல் 4 இடங்களில் உள்ளனர். (எ)

# தலைவர் பதவியிலிருந்து பிராத்வெய்ட் விலகல்!

கிங்ஸ்டன், ஏப். 02


மேற்கு இந்திய தீவுகளின் டெஸ்ட் கிரிக்கெட் அணியின் தலைவர் பதவியிலிருந்து கிரேக் பிராத்வெய்ட் விலகியுள்ளார்.

கடந்த 2021ஆம் ஆண்டு முதல் டெஸ்ட் அணியின் தலைவராக செயல்பட்டு வந்த அவர் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு தலைவர் பதவியிலிருந்து விலகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மேற்கு இந்திய தீவுகள் ரி - 20 அணிக்கு புதிய தலைவராக ஷாய் ஹோப் செயல்படுவார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. ரி - 20 அணியின் தலைவராக இதுவரை செயல்பட்டு வரும் ரோவ்மன் பவல் அந்தப் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். மேற்கு இந்திய தீவுகளின் ஒருநாள் அணிக்கு ஷாய் ஹோப் தலைவராக செயல்பட்டு வருகிறார்.

பவல் தலைமையில் மேற்கு இந்திய தீவுகள் அணி குறிப்பிடத்தக்க வெற்றிகளை பெறத் தவறியதால் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக கூறப்படுகிறது. (எ)



# களத்தில் உயிரிழந்த குத்துச்சண்டை வீரர்

அக்ரா, ஏப். 02

ஆபிரிக்க நாடான கானாவில் நடைபெற்ற குத்துச்சண்டை போட்டியின்போது, திடீரென வலிப்பு வந்து நைஜீரிய வீரர் உயிரிழந்தது பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. கானா தலைநகர் அக்ராவில் நடைபெற்ற போட்டியில் நைஜீரிய வீரர் கேப்ரியல், கானா வீரர் ஜான் ம்பங்கு என்பவரை எதிர்கொண்டார். இந்த மோதலின் 3ஆவது சுற்றில் இருவரும் ஆக்ரோசமாக தாக்கிக்கொண்டிருந்த போது, நைஜீரிய வீரர் கேப்ரியல் வலிப்பு ஏற்பட்டு மயங்கி விழுந்து களத்திலேயே உயிரிழந்தார். இது ரசிகர்களிடையே சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (எ)

# இனி புதிய பெயரில் வெற்றிக் கிண்ணம்

லண்டன், ஏப். 02

இந்திய கிரிக்கெட் அணி எதிர்வரும் ஜூன், ஜூலை மாதங்களில் இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடவுள்ளது.

2007ஆம் ஆண்டு முதல் இங்கிலாந்தில் நடைபெறும் இந்தியா - இங்கிலாந்து அணிகள் இடையிலான இந்த டெஸ்ட் தொடரில் வெற்றி பெறும் அணிக்கு இந்திய அணியின் முன்னாள் தலைவர் மன்சூர் அலிகான் பட்டோடி பெயரில் வெற்றிக் கிண்ணம் வழங்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில், இந்த கிண்ணத்துக்கு ஓய்வு கொடுக்க இங்கிலாந்து கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. நடப்பு தொடரிலிருந்து புதிய பெயர் அறிமுகப்படுத்தப்படும் என தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ)

# பாகிஸ்தான் - நியூசிலாந்து இரண்டாவது போட்டி இன்று

வெலிங்டன், ஏப். 02

பாகிஸ்தான் - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டி இன்று நடைபெறுகிறது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 5 ரி - 20 மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில், முதலில் நடைபெற்ற ரி - 20 தொடரை 4 - 1 என்ற கணக்கில் நியூசிலாந்து கைப்பற்றியது. தொடர்ந்து இரு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடரில் 1-0 என நியூசிலாந்து முன்னிலையில் உள்ளது.

இரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது ஒருநாள் போட்டி ஹாமில்டனில் இன்று நடைபெறுகிறது. இந்த நிலையில், நியூசிலாந்து அணியின் மார்க் சப்மென் இன்றைய போட்டியிலிருந்து விலகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வலது தொடை தசைநார் காயம் காரணமாக அவர் இன்றைய ஆட்டத்திலிருந்து விலகியுள்ளதாக தெரிவிக்



கப்பட்டுள்ளது. அவருக்குப் பதிலாக ரிம் செய்பர்ட் அணியில் சேர்க்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகாண...

நடத்திக் கொண்டிருக்க முடியாது. அபிவிருத்தி திட்டங்களையும் முன்னெடுக்கவேண்டும் என அவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சி தேர்தலுடன் பிரதானமான தேர்தல்கள் முடிவுக்கு வரும். மாகாணசபை தேர்தல்களை மாத்திரம் நடத்தவேண்டும். சட்டங்களை மாற்ற வேண்டியுள்ளதாலும்,நாட்டின் அபிவிருத்திக்கு பெருமளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாலும் மாகாண சபை தேர்தல்களை இந்த வருடம் நடத்த முடியாது என அவர் கூறினார். (அ)

## உயிர்த்த...

எம்மிடம் வினவியோ அல்லது ஊடகங்கள் முன் வந்து கருத்து வெளியிட்டோ பலன் இல்லை.

தற்போதைய ஆட்சி யில் பொலிஸில் உயர் பதவியொன்று வழங்கப்பட்டுள்ள நபரே உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தின்போது சி.ஐ.டி. பிரதானியாக இருந்தார். பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக உள்ளவரும் பிரதானியாக இருந்தார். இவர்கள் இருவரிடமும் வினவலாம்.

தேசிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் வேட்பாளர் ஒருவரின் மகன்மார் இருவரே தற்கொலைக் குண்டுதாரிகள். எனவே, ஒரு கட்சியாக இது தொடர்பில் தேசிய மக்கள் சக்தி எடுத்த நடவடிக்கை என்ன?

தமது தரப்பில் தவறு உள்ளதால் சில அதிகாரிகள் அரசியல் அடைக்கலம் தேடியுள்ளனர். கடந்த கால அரசாங்கங்கள்மீது பழிபோட்டுவிட்டு அவர்களை அரசாங்கம் பாதுகாக்கின்றது-என்றார்.

## 13ஆவது...

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் விஜயம் குறித்து வினவியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் அரசமுறை விஜயம் நாட்டுக்கு சிறந்தது. மக்கள் விடுதலை முன்னணியை போன்று எதிர்ப்பு தெரிவித்துக் கொண்டு எந்தவொரு எதிர்க்கட்சியும் வீதியில் பதாதைகளுடன் போராடப் போவதில்லை.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அண்மையில் இந்தியாவுக்கு அரச பயணத்தை மேற்கொண்டிருந்தார். அங்கு கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் நாட்டுக்கு முழுமையாக வெளிப்படுத்தப்படவில்லை. ஓரிரு பொதுவான விடயங்கள் மாத்திரமே வெளிப்படுத்தப்பட்டன.

நெருக்கடியான நிலையில் இந்தியா இலங்கைக்கு நிபந்தனையற்ற வகையில் ஒத்துழைப்பு வழங்கியுள்ளது என்பதை ஒருபோதும் மறக்க முடியாது.

இரு நாடுகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்படும் ஒப்பந்தங்கள் மற்றும் ஏற்றுக்கொள்ளப்படும் இணக்கப்பாடுகள் இலங்கையின் இறையாண்மையை முன்னிலைப்படுத்தியதாக அமையவேண்டும்.

இந்தியாவுடன் இலங்கை அரசாங்கம் செய்துகொள்ளவுள்ள ஒப்பந்தங்கள் குறித்து தீவிர அவதானம் செலுத்தியுள்ளோம். நாட்டுக்கு சாதகமாக அமையும் ஒப்பந்தங்களுக்கு நிபந்தனையற்ற வகையில் ஒத்துழைப்பு வழங்குவோம்.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் குறித்து இந்தியாவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது அவசியமற்றது. காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு பகிர்ந்தளித்தால் தேவையில்லாத முரண்பாடுகள் தோற்றம் பெறும்.

இனப்பிரச்னைக்கு தீர்வாகவே மாகாண சபை முறைமை அமுல்படுத்தப்பட்டது. மாகாண சபைத் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளமைக்கு நல்லாட்சி அரசாங்கத்தின் அரச தலைவர்கள் பொறுப்புக் கூற வேண்டும்.மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்-என்றார். (அ)

## எரிபொருளின்...

நாங்களும் எரிபொருள் விலையை குறைக்க விரும்புகிறோம், ஆனால் நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நாங்கள் இன்னும் கையாள்வதால் அது தற்போதைக்கு சாத்தியமில்லை.

நாட்டின் வருமானம் மற்றும் செலவினங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

அரசாங்கத்திற்கு நிலையான வருமானம் இருக்க வேண்டும். ஒரே நேரத்தில் குறிப்பிடத்தக்க குறைப்பை செயல்படுத்துவது கடினம் - என்றார். (அ)

## தேசிய...

இன்று தேசிய மக்கள் சக்தியின் வேகம் குறைக்கப்பட்டு, ஜே.வி.பி எழுச்சி பெற்றுள்ளதாகக் கூறும் அவர்,ஜே.வி.பி.யே தற்போது நாட்டை ஆட்சி செய்வதாக அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த அரசாங்கத்தின் தொலைநோக்குப் பார்வை மற்றும் தேசிய மக்கள் சக்திகளின் தொலைநோக்குப் பார்வை தொடர்பான விவாதத்தில் திலீப விதாரண மிக முக்கிய பங்கு வகித்தவர்.

மறுமலர்ச்சி என்ற கருத்தை கருத்தியல் ரீதியாக உருவாக்குவதில் திலீப மிக முக்கிய பங்கு வகித்தவர். அவர் அரசாங்கத்தின் மீது மிகுந்த விசுவாசத்தையும் கொண்டிருந்தார்.

தேசிய போக்குவரத்து ஆணையகத்தின் தலைவர் பதவியை அவர் ஆர்வத்துடனும் அர்ப்பணிப்புடனும் வகித்து வந்த தீலிபவின் இராஜினாமாவை, ஒரு சிறிய சம்பவமாகக் கருத முடியாது.

அது மட்டுமல்லாமல், பொதுவாக தேசிய மக்கள் சக்தி இயக்கத்தின் மக்கள், குறிப்பாக ஜே.வி.பியைச் சேர்ந்தவர்கள், திலீப மீது மிகுந்த மரியாதை வைத்திருந்தனர்.

எனவே, இந்த பின்னணியில் அவரது இராஜினாமா ஒரு சிறிய அபாயகரமான விடயமாக கருதப்படலாம்.

இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரை அரசியல் ரீதியாக நடத்துவது உயர்மட்டத் தலைமையே.தேசிய மக்கள் சக்தி என்று ஒரு நிர்வாக சபை இருக்கிறது. ஆனால், அது ஏதோ ஒரு வகையில் செயலிழந்து விட்டது.

தேசிய மக்கள் சக்தி அரசு செயல்படும் விதத்தால் அவர்களது அடித்தளம் வெகுவாகப் பலவீனமடைந்துள்ளது. இந்தத் தீங்கான நிலை தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் இருப்பைப் பாதிக்கும் விடயம் என்று நினைக்கிறேன் - என்றார்.(அ)

## ஜூலை...

அவர், பஸ்கள் ஏற்கனவே மூன்று ரூபாய் நட்டத்தில் இயக்கப்படுவதாக கூறினார்.

கூடுதலாக, அரசாங்கம் விதித்துள்ள புதிய வரி விகிதங்களின் கீழ் பஸ்களின் விலைகளும் அதிகரித்துள்ளதாகவும், பஸ்களில் வற் வரியும் சேர்க்கப்பட்டுள்ளதாகவும், அதன்படி பஸ் கட்டண உயர்வு தவிர்க்க முடியாதது என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொறுப்புடன், நமக்கு இன்னும் இரண்டு மாதங்கள் மட்டுமே உள்ளன. விரைவில் வருடாந்த பஸ் கட்டணம் திருத்தப்படவுள்ளது. எனவே, ஜூலை மாதத்தில் பஸ் கட்டணம் நிச்சயமாக கணிசமாக அதிகரிக்கும்.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்பு போக்குவரத்து அமைச்சருடன் இதைப் பற்றி கலந்துரையாடியிருந்தோம், இப்போது இந்த ஆபத்தை நாங்கள் கடந்துவிட்டோம். நாங்கள் அவருக்கு நேரடியாகத் தெரிவித்திருக்கின்றோம்.

இதன்படி, ஜூலை மாதத்திற்குள் இந்த பஸ் கட்டணங்களை உயர்த்த வேண்டியிருக்கும்.

ஏனென்றால் பஸ்களுக்கு வற் வரி சேர்க்கப்பட்டுள்ளது, பேருந்தின் விலை அதிகரித்துள்ளது, ஏனைய அனைத்து செலவுகளும் அதிகரித்துள்ளன என்று நாங்கள் நீண்ட காலமாக கூறி வருகிறோம் - என்றார்.

(அ)

## திட்டங்களின்...

ஆளுநர் நா.வேதநாயகன் அறிவுறுத்தினார்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் மீளாய்வுக் கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை ஆளுநர் தலைமையில் இடம்பெற்றது.

ஆரம்பத்தில் உரையாற்றிய ஆளுநர், தூய்மையான இலங்கை செயற்றிட்டம் எமது மாகாணத்தில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் அதனை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும். தூய்மையான இலங்கை செயற்றிட்டத்தை முன்னெடுப்பதற்கு திட்டங்களை அமைச்சுக்களின் செயலாளர்கள் தயாரிக்கவேண்டும்.

மேலும் ஒவ்வொரு திணைக்களத் தலைவர்களும் தங்களது அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்களின் கடமை நேரம், வரவுகள் தொடர்பில் கவனம் செலுத்தவேண்டும். பொதுமகன் அலுவலகத்துக்கு வந்து அலுவலர்களுக்காக காத்திருக்கக்கூடாது. அதேநேரம் டிஜிற்றல் மயமாக்கல் செயற்றிட்டத்தையும் படிப்படியாக நாம் ஆரம்பிக்க வேண்டும்.

2025ஆம் ஆண்டு முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்களின் நிதி முன்னேற்றம் தொடர்பில் மாத்திரமே வடக்கு மாகாண சபையின் இணையத்தளத்தில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. நிதி முன்னேற்றத்துடன், பௌதீக முன்னேற்றத்தையும் இணையத்தளத்தில் வெளியிடவேண்டும்.

மேலும் திட்டங்களை அடையாளப்படுத்தும்போது யாராவது சொல்வதையோ, ஒளிப்படங்களில் பார்ப்பதையோ விட ஓரிடத்தை நேரில் சென்று பார்வையிட்டால்தான் அந்தத் திட்டத்தை செய்ய முடியுமா இல்லையா என்பது தெரியவரும். மேலும், பின்தங்கிய பிரதேசங்களை நேரில் சென்று பார்வையிட்டால்தான் அந்த மக்களுக்கு உதவவேண்டும் என்ற எண்ணம் வரும். எனவே திணைக்களத் தலைவர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள் சுழற்சி முறையில் பின்தங்கிய கிராமங்களை நேரில் சென்று பார்வையிடுங்கள்.

2026ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தவுள்ள திட்டங்களின் முன்மொழிவுகளை எதிர்வரும் மே மாதத்துக்கு முன்னர் நாம் சமர்ப்பிக்கவேண்டியுள்ளது. எனவே அதற்கான திட்டமிடல்களையும் இப்போதே ஆரம்பியுங்கள். குறிப்பாக வீதி அபிவிருத்தித் திணைக்களம், உள்ளூராட்சித் திணைக்களம் என்பன எவ்வளவு நிதி கிடைத்தால் வீதிகளை அபிவிருத்தி செய்ய முடியும் என்பதை அடையாளப்படுத்த வேண்டும் - என்றார் ஆளுநர்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், ஒதுக்கப்பட்ட நிதியை உரிய காலத்துக்குள் செலவு செய்து முடிக்கவேண்டும். கட்டடங்கள் திணைக்களம் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முழுமையான ஒத்துழைப்புகளை வழங்கியிருக்கின்றார்கள். திணைக்களத் தலைவர்களும், அமைச்சின் செயலாளர்களும் சரியான ஒப்பந்தகாரர்களைத் தெரிவு செய்ய வேண்டும், என்றார்.

தொடர்ந்து வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் - நிதி எஸ்.குகதாசன், கடந்த காலங்களில் வடக்கு மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் குறைவளவான கட்டுநிதியே விடுவிக்கப்பட்டிருக்கின்றது. இதனால் சில திட்டங்கள் செய்து முடிக்கப்பட்டிருந்தாலும் அதற்கான நிதியை வழங்க முடியாமல் சிக்கல்களை எதிர்கொண்டிருக்கின்றோம். எனவே இம்முறை ஒதுக்கப்பட்ட நிதியில் எவ்வளவு கட்டுநிதி விடுவிப்பார்கள், எப்படி விடுவிப்பார்கள் என்பது தொடர்பான தெளிவான திட்டவரைவு தேவை எனவும் குறிப்பிட்டார்.

இதன் பின்னர் வடக்கு மாகாண நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும், சுற்றுலா, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மோட்டார் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அமைச்சு, வடக்கு மாகாண விவசாய மற்றும் கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன, மீன்பிடி, நீர் விநியோக மற்றும் சுற்றாடல் அமைச்சு, வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு மாகாண சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சு, வடக்கு மாகாண மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூக சேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும் மற்றும் தொழிற்துறையும் தொழில் முனைவோர் மேம்பாடும் மற்றும் வர்த்தக வாணிப அமைச்சு ஆகிய 5 அமைச்சுக்களினதும் அதன் கீழான திணைக்களங்களினதும் முன்னேற்றங்கள் தனித்தனியாக ஆராயப்பட்டன.

(அ)

## கொழும்பில்...

ஈடுபடுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் அதிகாரிகள் உட்பட இராணுவ வீரர்கள் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத் தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

போக்குவரத்து பாதுகாப்புக்காக இராணுவ வீரர்களும் ரோந்து பணிகளுக்காக சிவில் பாதுகாப்பு அதிகாரிகளும் ஈடுபடுத்தப்படவுள்ள னர்.

பல்வேறு பிரதேசங்களில் இடம்பெறும் குற்றச் செயல்கள் தொடர்பில் ஆராய்வதற்குப் புலனாய்வு அதிகாரிகளும் ஈடுபடுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## சில உள்ளூராட்சி...

பதில் தலைவர் மொஹமட் லபார் தாஹீர் மற்றும் கே.பி.பெர்னாண்டோ ஆகிய நீதியரசர்கள் அடங்கிய குழாம் முன்னிலையில் குறித்த மனுக்கள் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தமது வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதற்கு எதிராக, கொழும்பு மாநகர சபை சார்பில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களால், இந்த மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டன. (அ)

## யாழ்...

பகிடிவதை செய்வதானது இலங்கையின் மிகக் கடுமையான குற்றங்களில் ஒன்றாகவும் பிணை வழங்கப்படாத குற்றமாகவும் பிரகடனப்படுத்தியுள்ளது.

மேலும், பகிடிவதை செய்யும் அல்லது ஊக்குவிக்கும் எந்தவொரு நபரும் கைது பிடியாணை இல்லாமல் கைது செய்யப்படலாம் எனவும் ஏற்பாடுகளை கொண்டுள்ளது

எனவே, யாழ். பல்கலைகழகத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் மேற்குறித்த பகிடிவதை சம்பவம் தொடர்பில் உடனடி சட்ட நடவடிக்கை எடுத்து அது தொடர்பிலான அறிக்கையினை எதிர்வரும் 04.04.2025 இற்கு முன் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய காரியாலயத்துக்கு அனுப்பிவைக்குமாறு யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர், கோப்பாய் பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் யாழ்ப்பாண பிராந்திய போலீஸ் அத்தியட்சகர் ஆகியோருக்கு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# 30 ஆயிரம் இளைஞர், யுவதிகளை அரச சேவையில் இணைப்போம்!

## ஜனாதிபதி அநுர குமார

கொழும்பு, ஏப். 02

**அரச சேவையில் 30ஆயிரம் இளைஞர், யுவதிகளை இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.**

உள்ளூராட்சி தேர்தல் தொடர்பான மக்கள் சந்திப்பு அண்மையில் புத்தள நகரில் நடைபெற்றது. இதில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அரச வேலைகளுக்கு இப்போது நிறைய செய்தித்தாள்களில் விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. விண்ணப்பியுங்கள், நாங்கள் உங்களுக்கு வேலை வாங்கித் தருகிறோம். நாங்கள் 30 ஆயிரம் புதிய, திறமையான இளைஞர், யுவதிகளை வேலைக்கு அமர்த்துகிறோம். பணம் இப்போது ஒதுக்கப்பட்டுள்ளது.

அரச சேவையில் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஓய்வூதியதாரர்களுக்கான கொடுப்பனவு உயர்த்தப்பட்டுள்ளது. அஸ்வெசும கொடுப்பனவு தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இவை எதுவுமே கிடைக்காமல் 8 இலட்சம் பேர் இருக்கிறார்கள். அவர்களுக்காக 5 ஆயிரம் ரூபாய் பெறுமதியான உணவுப் பொதியை சதொச ஊடாக 2 ஆயிரத்து 500 ரூபாய்க்கு வழங்குகிறோம்.

மேலும் அஸ்வெசும பெறாத ஒரு குழு உள்ளது. அவர்களுக்கு தகுதி இருந்தும் அவை கிடைப்பதில்லை. நாங்கள் விண்ணப்பங்களை கோரியுள்ளோம். ஜூன் மாதத்தில் தேர்வு செய்யும் சபை ஊடாக தேர்ந்தெடுக்கப்பட்ட 4 இலட்சம் குடும்பங்களுக்கு புதிதாக அஸ்வெசும கொடுப்பனவை வழங்குவோம் - என்றார். (ஐ)

## கொழும்பில் விசேட பாதுகாப்பு 6 ஆயிரம் பொலிஸார் ஈடுபடுவர்!

கொழும்பு, ஏப். 02

பண்டிகைக் காலத்தை முன் னிட்டு கொழும்பு மாநகரில் விசேட பாதுகாப்பு நடவடிக் கைகளை முன்னெடுக்கவுள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இதன்படி, குறித்த பாது காப்பு நடவடிக்கைகளுக்காக 6 ஆயிரம் பொலிஸ் அதிகாரிகள் ஈடுபடுத்தப்படவுள்ளனர். பொலிஸ் அதிகாரிகள் உட்பட இராணுவம் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

போக்குவரத்து பாதுகாப் புக்காக இராணுவத்தினரும் இணைந்து கண்காணிப்பு பணிகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். அத்துடன், புலனாய்வு பிரிவின ரும் களமிறக்கப்பட வுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## வேறொருவரின் வீட்டுக்கு ராஜபக்ஷ இழப்பீடு பெற்றார்!

### ஜனாதிபதி அநுரகுமார தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 02

அறகலயவின்போது தீக்கிரையாக்கப்பட்ட வேறொருவரின் பெயரிலுள்ள வீடு ஒன்றுக்கு ராஜபக்ஷ ஒருவர் இழப்பீடு பெற்றுள்ளார் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அறிக்கை ஒன்றை விரைவில் வெளியிடவுள்ளதாகவும் ஜனாதிபதி கூறினார்.

மேலும், செவனலகலவில் தீக்கிரையாக்கப்பட்ட வீட்டுக்காக ராஜபக்ஷக்களில் ஒருவர் இழப்பீட்டை பெற்றுக்கொண்டுள்ளார். எனினும், விசாரணையின்போது அந்த வீடு அவருக்கு சொந்தமானது இல்லை என்பது தெரியவந்துள்ளது.

அந்த வீட்டின் காணி உரிமை வேறு ஒருவரின் பெயரில் உள்ளது. எனினும் ராஜபக்ஷ இழப்பீட்டை பெற்றுள்ளார். இந்த விவகாரம் குறித்த அறிக்கை எனக்கு கிடைத்துள்ளது. அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை - என்றும் ஜனாதிபதி சொன்னார். (ஐ)

## உருக்குலைந்த நிலையில் வவுனியாவில் சடலம் மீட்பு

வவுனியா, ஏப். 02

குளத்தின் கரையிலிருந்து உருக்குலைந்த நிலையில் சடலம் ஒன்று நேற்று செவ்வாய்க்கிழமை கண்டுபிடிக்கப்பட்டது.

வவுனியா, நெளுக்குளம் பொலிஸ் பிரிவில் தம்பனை புளியங்குளம் பகுதியிலேயே இந்த சடலம் மீட்கப்பட்டது.

சடலம் மிகவும் உருக்குலைந்து போயுள்ளதால் உரியவரை கண்டறிய முடியவில்லை. என்றும், சடலம் மீட்கப்பட்ட இடத்திலிருந்து சற்றுத்தூரத்தில் வயல் வெளியிலிருந்து ஆண் ஒருவரின் மேலாடையும் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் தொடர்ந்து வருகின்றனர். (ஐ-10)

## வியாழேந்திரனுக்கு தொடர்ந்தும் மறியல்

கொழும்பு, ஏப். 02

இலஞ்சம் பெற்றுக்கொள்வதற்கு உதவி செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் ச. வியாழேந்திரனை எதிர்வரும் 08ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளால் கடந்த மார்ச் 25 ஆம் திகதி கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

## ஓ. எல். பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணி ஆரம்பம்!

கொழும்பு, ஏப். 02

அண்மையில் நிறைவடைந்த கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் விடைத்தாள் திருத்தும் பணிகள் நேற்று செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பமாகின.

ஆயிரத்து 66 மத்திய நிலையங்களில் விடைத்தாள் திருத்தும் பணி முன்னெடுக்கப்படுகிறது.

எதிர்வரும் 10ஆம் திகதி வரை இந்தப் பணிகள் முன்னெடுக்கப் படும்.விடைத்தாள் திருத்தும் பணியில் 16 ஆயிரம் ஆசி ரியர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று பரீட் சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## உள்ளூராட்சி தேர்தல் 364 முறைப்பாடுகள் பதிவு

கொழும்பு, ஏப். 02

எதிர்வரும் மே 06 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபை தேர்தல் தொடர்பில் நேற்றுமுன்தினம் வரை 364 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, வன்முறை சம்பவங்கள் தொடர்பில் 2 முறைப்பாடுகளும் தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 335 முறைப்பாடுகளும் ஏனைய விடங்கள் தொடர்பில் 27 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## சாமர சம்பத் எம்.பியின் விளக்கமறியலும் நீடிப்பு

கொழும்பு, ஏப். 02

ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் கைது செய்யப்பட்ட புதிய ஜனநாயக முன்னணி கட்சியின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்கவை எதிர்வரும் 08ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

2016ஆம் ஆண்டில் ஊவா மாகாண முதலமைச்சராக கடமையாற்றிய போது பாடசாலை மாணவர்களுக்கு புத்தகப்பை வழங்குவதற்காக மாகாண சபை ஊடாக வங்கியிலிருந்து 10 இலட்சம் ரூபாயை காசோலையாக பெற்று அதனை பணமாக மாற்றி தனிப்பட்ட தேவைக்காக பயன்படுத்தியமை உள்ளிட்ட 3 ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளால் கடந்த மார்ச் 27 ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தார்

இரு வழக்குகளில் அவருக்கு பிணை வழங்கப்பட்ட நிலையில் மற்றொரு வழக்கு தொடர்பில் அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சலுகை விலையில் பொதிகள் வழங்கும் திட்டம் ஆரம்பமானது

கொழும்பு, ஏப். 02

அஸ்வெசும உதவி திட்டத்துக்கு பதிவு செய்த குடும்பங்களுக்கு சலுகை விலையில் பொதிகள் வழங்கும் வேலைத்திட்டம் நேற்று ஆரம்பமானது.

சித்திரை வருட பிறப்பின்போது மக்களின் வாழ்க்கை செலவை குறைத்தல் மற்றும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டம் எதிர்வரும் 13ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படும்.

இதன்படி, லங்கா சதொசவில் 5 ஆயிரம் ரூபாய் பெறுமதியான அத்தியாவசிய உணவுப் பொருட்கள் அடங்கிய பொதியை 50 வீத விலைக்கழிவுடன் 2 ஆயிரத்து 500 ரூபாய்க்கு பெற்றுக்கொள்ள முடியும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

லங்கா சதொச ஊடாக பெற்றுக்கொள்ள முடியாத பகுதிகளிலுள்ள பயனாளிகளுக்கு தெரிவுசெய்யப்பட்ட கூட்டுறவு விற்பனை நிலையங்கள் ஊடாக இந்த சலுகைப் பொதிகள் வழங்கப்படவுள்ளன. 8 இலட்சத்து 12 ஆயிரத்து 753 குடும்பங்கள் இந்த உதவியை பெறத் தகுதி பெற்றுள்ளன. (ஐ)

## சட்டத்தின் ஆட்சி அழிக்கப்பட்டு மக்களை அடக்குகின்றது அரசு!

### பொதுஜன பெரமுன கட்சி சொல்கிறது

கொழும்பு, ஏப். 02

தற்போதைய அரசாங்கம் நாட்டில் சட்டத்தின் ஆட்சியை அழித்து மக்களையும் ஊடகங்களையும் அடக்கி வருகிறது - இவ்வாறு சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைமையகத்தில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.சட்டத்தின் ஆட்சி நிலவும் ஒரு நாட்டில் செயல்பாட்டு சுதந்திரத்தில் யாரும் தலையிட முடியாது. சட்டத்தின் ஆட்சி ஒழிக்கப்பட்டால் அந்த நாட்டு மக்கள் தங்கள் ஜனநாயக உரிமைகளை இழப்பார்கள்.

நீதித்துறை, சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் பொலிஸ் பிரிவு ஆகிய மூன்று நிறுவனங்களும் இந்த நாட்டில் சட்டத்தின் ஆட்சியை பாதுகாப்பதற்காகவே செயல்படுகின்றன. அரசாங்கத்தின் அரசியல் மேடையிலிருந்த இரண்டு ஓய்வுபெற்ற அதிகாரிகளை பொலிஸ் பிரிவு பொறுப்பான செயலாளராகவும், குற்றப் புலனாய்வுப் பிரிவின் தலைவராகவும் நியமித்து இலங்கை பொலிஸ் பிரிவு அரசியல்மயமாக்கப்பட்டுள்ளது. இலங்கை பொலிஸ் பிரிவை கண்ணியம் இல்லாத இடமாக மாற்றப்பட்டுள்ளது.

சட்டத்தின் ஆட்சி இல்லாத ஒரு நாட்டுக்கு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஒருபோதும் வரமாட்டார்கள். நாட்டில் தற்போது நிலவும் மோசமான சூழ்நிலை மாறாவிட்டால் முதலீட்டாளர்கள் வரமாட்டார்கள் - என்றும் கூறினார். (ஐ)

# முட்டைகளுக்கு வற் வரி அறவீடு

கொழும்பு, ஏப். 02

முட்டை விற்பனை மூலம் கிடைக்கும் வருமானத்துக்கு நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 18 சதவீதம் வற் வரி விதிக்கப்பட்டுள்ளது.

வற் வரி எனப்படும் பெறுமதி சேர் வரி விதிக்கப்பட்டாலும் முட்டைகளின் விலையில் எந்தவிதமான மாற்றமும் இல்லை என்று அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எனினும், முட்டைகளுக்கு வற் வரி விதிப்பது நியாயமற்றது.

இதனால் இந்த தொழில்துறையில் வீழ்ச்சி ஏற்படும் - என்றும் அந்த சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.04.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org